# கவித்தொகை

கணினி

**(B.Sc Computer Science)**

டாக்டர் ம. திருமலை, எம்.ஏ.,பிஎச்.டி.,
பேராசிரியர் & தலைவர்,
இலக்கியத் திறனாய்வுத் துறை.
தமிழியற் புலம்.
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்.
மதுரை 625 021



மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

விலை ரூ. 12-00

# மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

**கணினி**

**(B.Sc Computer Science)**

பட்டத் தேர்வுகள்

1995

( நான்கு பருவங்களுக்கும் )

# கவித்தொகை

(கல்லூரி, மாலைக்கல்லூரி, அஞ்சல் வழிக் கல்வித் துறை, தனிப்படிப்பு ஆகிய அனைத்திற்கும் பொது )

மதுரை காமராசர் பல்கலைக்கழக
அறிவியல் இளையர் (கணினி)
பட்டத்திற்குரிய கவித்தொகை.

வெளியீடு: பதிப்புத்துறை,
முதற் பதிப்பு: 1995.

**கிடைக்குமிடம்**
பதிப்பாளர் - பதிப்புத்துறை,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை - 625 021.

அச்சாக்கம் : **M.M.3114**,

**மதுரை காமராசர் பல்கலைக்கழக கூட்டுறவு அச்சகம் லிட்., மதுரை-21.**

# பதிப்புரை

என்றுமுள தென்தமிழில் புதுமைகள் வளர வேண்டும் என்ற விருப்பம் உயர்ந்தோங்கி வளரும் இந்நாளில், காற்றினும் விரைந்து வளரும் கணினிக் கல்வியிலும் தமிழ் சிறந்தோங்கி நலமோங்கக் காண்கிறோம். அன்று முதல் இன்று வரை தமிழ் பெற்ற கவிதைச் செல்வங்கள் ஏராளம்! காலந்தொறும் தமிழ் கண்ட வளர்ச்சியையும் புதுமையையும் கணினிக் கல்வி பெறும் இளையோரும் தெரிந்து கொள்வது இன்றியமையாதது.

எந்தக் கல்வி பயின்றாலும் நாட்டுப் பற்றும் மொழிப் பற்றும் நெஞ்சில் நீக்கமற நிறைந்திருக்க வேண்டும் என்பதன் விளைவே இக் கவித்தொகை. பண்டைய வாழ்க்கையை எண்ணுவதோடு இன்றைய சமுதாய நிலைமை, நடைமுறை வாழ்க்கை போன்றவற்றை இன்றைய கவிஞர்கள் இலட்சிய வேகத்துடனும் உணர்ச்சித் துடிப்புடனும் சித்திரிப்பதை இத் தொகுப்பில் இடம் பெற்றுள்ள கவிதைகள் மூலம் கண்டுகொள்ளலாம்.

தொன்மையை எண்ணிப் பெருமிதம் கொள்வதுடன் நின்று விடாமல், இன்றைய நிலையையும் எண்ணிச் செயலாற்ற வேண்டும் என்பதையும் உள்ளத்திற் கொண்டு இத்தொகுப்பில் உள்ள கவிதைகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. பயில்வோரும் பயிற்றுவிப்போரும் இதனை நன்குணர்ந்து மேலும் புதுமைகளைப் படைப்பார்கள் என்ற நம்பிக்கையுடன் இந்தக் கவித்தொகையை மாணவர்களுக்கு மகிழ்ச்சியுடன் படைக்கிறோம்

## பாட நேரம்

முதற்பருவம் : கவித்தொகை 2 மணிநேரம்/ உரைநடை 1 மணிநேரம்/ சிறுகதை 1 மணி நேரம், கலைச்சொல்லாக்கம் / மொழி பெயர்ப்பு 1 மணிநேரம்
(5 மணி நேரம்)

இரண்டாம் பருவம்: கவித்தொகை 2 மணிநேரம்/உரைநடை 1 மணிநேரம்/ புதினம் 1 மணி நேரம்/ பிழை திருத்துதல்/பொதுக்கட்டுரை 1 மணிநேரம்
(5 மணி நேரம் )

மூன்றாம் பருவம் : கவித்தொகை 1 மணிநேரம்/ நாடகம் 1 மணிநேரம்/ இலக்கிய வரலாறும் படைப்பாற்றல் வெளிப்பாடும் 1 மணி நேரம்
(3 மணிநேரம்)

நான்காம் பருவம் : கவித்தொகை 1 மணிநேரம்/உரைநடை 1 மணி நேரம்/ இலக்கிய வரலாறும் கவிதைச் சுவையாற்றல் வெளிப்பாடும் 1 மணி நேரம்.
(3 மணி நேரம்)

## மூன்றாம் பருவம் - இலக்கிய வரலாறு

இக்கால இலக்கியம்: மரபுக் கவிதை, புதுக்கவிதை, சிறுகதை. புதினம், உரைநடை வளர்ச்சி.

## நான்காம் பருவம் - இலக்கிய வரலாறு

சங்க இலக்கியம் - எட்டுத் தொகை, பத்துப் பாட்டு, பதினெண்கீழ்க்கணக்கு.

# முதற்பருவம்

## இக்கால இலக்கியம்

# பொருளடக்கம்


1. தொழில் - பாரதியார்
2. நீங்களே சொல்லுங்கள் - பாரதிதாசன்
3. சித்தார்த்தன் துறவு - ஆசியசோதி கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை
4. நபிகள் நாயக மான்மிய மஞ்சரி - சதாவதானி செய்குதம்பிட பாவலர்
5. உன்னையறிந்தால் - கண்ணதாசன்
6. செய்யும் தொழிலே தெய்வம் - பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்
7. இணையற்ற இந்தியா - புதுமைப்பித்தன்
8. விழாத விழாக்கள் - சுரதா
9. வாழ்க மானிடம் - குலோத்துங்கன்
10. சமாதான தேவதை - அப்துல் ரகுமான்
11. விஞ்ஞானி - மீரா
12. கவிஞன் - அபி
13. உனக்காகப் பாடுகிறேன் - மு. மேத்தா
14. சீறத் தெரியாத எங்கள் ஊர்ப் பாம்புகள் - சிற்பி
15. தகனம் - புவியரசு
16. மண் குதிரை - கந்தர்வன்
17. வேறென்ன வேண்டும் - வைரமுத்து
18. பெண்ணே, நீ . . .? - பு.மு. சாந்தமூர்த்தி

# 1. தொழில்

இரும்பைக் காய்ச்சி உருக்கிடுவீரே
யந்திரங்கள் வகுத்திடுவீரே
கரும்பைச் சாறு பிழிந்திடுவீரே
கடலில் மூழ்கிநன் முத்தெடுப் பீரே
அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயிரந் தொழில்செய்திடு வீரே
பெரும்புகழ் நுமக்கேஇசைக் கின்றேன்
பிரம தேவன் கலையிங்கு நீரே 1

பாட்டும் செய்யுளும் கோத்திடு வீரே
பரத நாட்டியக் கூத்திடு வீரே
காட்டும் வையப் பொருள்களின் உண்மை
கண்டு சாத்திரம் சேர்த்திடு வீரே
நாட்டி லேயறம் கூட்டிவைப் பீரே
நாடும் இன்பங்கள் ஊட்டிவைப் பீரே
தேட்ட மின்றி விழிஎதிர் காணும்
தெய்வ மாக விளங்குவிர் நீரே 2

– பாரதியார்

## 2. நீங்களே சொல்லுங்கள்

சித்திரச் சோலைகளே - உமை நன்கு
திருத்தஇப் பாரினிலே - முன்னர்
எத்தனைத் தோழர்கள் ரத்தம் சொரிந்தன
ரோஉங்கள் வேரினிலே ! 1

நித்தம் திருத்திய நேர்மையி னால்மிகு
நெல்விளை நன்னிலமே - உனக்
கெத்தனை மாந்தர்கள் நெற்றி வியர்வை
இறைத்தனர் காண்கிலமே 2

தாமரை பூத்த தடாகங்களே உமைத்
தந்தஅக் காலத்திலே - எங்கள்
தூய்மைச் சகோதரர் தூர்ந்து மறைந்ததைச்
சொல்லவோ ஞாலத்திலே 3

ஆர்த்திடும் யந்திரக் கூட்டங்களே உங்கள்
ஆதி அந்தம் சொல்லவோ - எங்கள்
ஊர்த்தொழி லாளர் உழைத்த உழைப்பில்
உதித்தது மெய் யல்லவோ ? 4

தாரணியே தொழிலாளர் உழைப்புக்குச்
சாட்சியும் நீயன்றோ - பசி
தீருமென்றால் உயிர்போகும் எனச் சொல்லும்
செல்வர்கள் நீதி நன்றோ ? 5

கிலியை விடுத்துக் கிளர்ந்தெழுவார் இனிக்
கெஞ்சும் உத்தேசமில்லை - சொந்த
வலிவுடையார் இன்ப வாழ்வுடையார் இந்த
வார்த்தைக்கு மோசமில்லை. 6

– பாரதிதாசன்

# 3.ஆசிய சோதி

## (சித்தார்த்தன் துறவு)

உடலின் உறுதியும் ஊக்கமும் உடையோன்
பொருளும் புகழும் புத்தியும் உடையோன்
காசினி யாளக் கருதுவ னேலோர்
மன்னர் மன்னனாய் வாழுதற் குரியோன்
குலத்தில் பிறந்த குணந்திகழ் கோமான்
வாழ்வில் ஓய்ந்து மனந்தள ராமல்
அதன்,
இன்பத் துறையில் இறங்கி நிற்போன்
விஞ்சிய காதல் விருந்தை அருந்தி
அமையா தெங்கும் ஆசை யுடையோன்
நரையும் திரையும் மூப்பும் நண்ணி
வெறுப்பு மிகுந்த விரக்த னாகாது
நன்மை தீமைஎந் நாளும் ஒன்றாய்க்
கலந்து தங்குமிக் காசினி மீது
வாழ்வதில் மிக்க மகிழ்ச்சி உடையோன்
புவியின் அழகிய பொருளைத் தெரிந்து
சொந்த மாக்கிடச் சுதந்திர முடையோன்
தனக்கென வாழாத் தரும சீலன்
என்றும் மக்கள் ஏத்துதற் குரிய
மனிதன் ஒருவன் மண்ணில் தோன்றி
அருளால் அனைத்தும் அறவே ஒழித்திவ்
வைய மீதில் மானிட ரெல்லாம்
உய்யும் வழியை உணர்த்தும் மந்திரம்
பாதலம் அதனில் பதுங்கிக் கிடப்பினும்
இவ்வுல கத்தினில் யாரும் இதுவரை
அஞ்ஞா னத்தால் அறியா திருப்பினும்
ஓய்வொழி வின்றி உழைத்திடு வானேல்
எந்நா ளாயினும் எவ்விடத் தாயினும்
வெளியாம் நன்கு விளங்குதல் திண்ணம்

தேடின கண்கள் தெரிசனம் செய்யும்
நடந்த கால்கள் நன்னிலம் சேரும்
பண்ணிய தியாகம் பழுதா காது.

**– கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை**

# 4. நபிகள் நாயகமான்மிய மஞ்சரி

பெற்றசிறு பெண்மகவைப் பேணிவளர்த் தூர்ப்புறத்தே
உற்றகுழி தோண்டியுயி ரோடுபுதைத் தோகையிடும்
அற்றமிலா வன்கணரும் அன்பின்நிலை கண்டுணரும்
பற்றவழி காட்டுமுங்கள் பண்புடைமை போற்றேமோ
பக்தநபி நாயகமே பண்புடைமை போற்றேமோ 1

ஆய்ந்தசுக துக்கமெலாம் ஆடவர்க்கும் பெண்டிர்க்கும்
நேர்ந்தபொது' என்றுன்னிச் செம்மையறு கைம்மைகளும்
ஓர்ந்துமறு மாமணம்செய் துய்யும்நெறி காட்டிஅறம்
தேர்ந்தமதிப் பேறுடைமை செப்புதற்கும் ஏலாதே
தெய்வநபி நாயகமே செப்புதற்கும் ஏலாதே 2

மக்களிடை தாழ்வுயர்வு வன்மைமென்மை தீண்டாமை
மிக்ககுல பேதமுதல் வேற்றுமையெ லாமொறுத்துத்
தக்கசம தத்துவமாம் தண்ணிழற்கீழ் ஆக்கியென்றும்
தொக்கஅருள் கூர்ந்துவந்த துய்யநிலை பொய்யேயோ
சோதிநபி நாயகமே துய்யநிலை பொய்யேயோ 3

குற்றமற வேலைசெய்த கூலிகளின் அங்கமிசை
உற்றவிய ராறுமுனம் உள்ளபடி உள்ளதொகை
சொற்றபடி எட்டுணையும் சோர்வுவரா தீந்துதவல்
நற்றவமென் றோதுமுங்கள் ஞாயமுறை ஆயேமோ
ஞானநபி நாயகமே ஞாயமுறை ஆயேமோ 4

கேடுவரும் தொல்லைமிகும் கேண்மையறும் பண்பொழியும்
பாடுவரும் கைப்பொருளும் பாழாகும் பல்குமனச்
'சூடுவரும் கொள்ளற்க சூதாட்டம்' என்றமறைப்
பீடுவரும் வாய்மைசொற்ற பின்னேயும் உன்னேமோ
பெட்புநபி நாயகமே பின்னேயும் உன்னேமோ 5

**– சதாவதானி செய்குதம்பிப் பாவலர்.**

## 5. உன்னையறிந்தால்

உன்னை யறிந்தால் - நீ உன்னை யறிந்தால்
உலகத்தில் போராடலாம்
உயர்ந்தாலும் தாழ்ந்தாலும் - தலை
வணங்காமல் நீ வாழலாம் 1

மானம் பெரிதென்று வாழும் மனிதர்களை
மானென்று சொல்வதில்லையா ? - தன்னைத்
தானும் அறிந்துகொண்டு ஊருக்குச் சொல்பவர்கள்
தலைவர்கள் ஆவதில்லையா ? 2

பூமிக்கு நேராக வாழ்பவர் எல்லோரும்
சாமிக்கு நிகரில்லையா ? - பிறர்
தேவை யறிந்துகொண்டு வாரிக் கொடுப்பவர்கள்
தெய்வத்தின் பிள்ளையில்லையா ? 3

மாபெரும் சபையினில் நீநடந்தால் உனக்கு
மாலைகள் விழவேண்டும் - ஒரு
மாற்றுக் குறையாத மன்னவன் இவனென்று
போற்றிப் புகழ வேண்டும். 4

**கண்ணதாசன்**

# 6. செய்யும் தொழிலே தெய்வம்

செய்யும் தொழிலே தெய்வம் - அந்தத்
திறமைதான் நமது செல்வம்
கையும் காலும்தான் உதவி - கொண்ட
கடமைதான் நமக்குப் பதவி 1

பயிரை வளர்த்தால் பயனாகும் - அது
உயிரைக் காக்கும் உணவாகும்
வெயிலே நமக்குத் துணையாகும் - இந்த
வேர்வைகள் எல்லாம் விதையாகும்
தினம் வேலையுண்டு குல மானமுண்டு
வருங் காலமுண்டு அதை நம்பிடுவோம். 2

சாமிக்குத் தெரியும் பூமிக்குத் தெரியும்
ஏழைகள் நிலைமை - அந்தச்
சாமி மறந்தாலும் பூமி தந்திடும்
தகுந்த பலனை - இதைப்
பாடிப்பாடி விளையாடி யாடிப்பல
கோடிக்கோடி முறை கும்பிடுவோம் 3

காயும் ஒருநாள் கனியாகும் - நம்
கனவும் ஒருநாள் நனவாகும்
காயும் கனியும் விலையாகும் - நம்
கனவும் நினைவும் நிலையாகும் - உடல்
வாடினாலும் பசி மீறினாலும் - வழி
மாறிடாமலே வாழ்ந்திடுவோம். 4

– பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

# 7. இணையற்ற இந்தியா

இந்தியா தேசம் - அது
இணையற்ற தேசம் - என்று
யாங்களுமறிவோம் - வெள்ளை
ஆங்கிலரறிவார் - பிள்ளைத்
துருக்கனுமறிவான் - அறிவால்
சூழ்ந்தது தொல்லை.

சிந்தையிலே பின்னிவைத்த சிலந்திவளச் செல்வி
செல்வழியில் கண்ணியிட்டுச் செயக்கம்பம் நாட்டும்
'எந்தையர்கள் நாடல்லோ இமையவர்கள் நாடு
இமவானின் ஆதரவில் இருந்துவரும் நாடு
கந்தமலர்ப் பூச்செறிவில் கடவுளர்க ளோடு
கன்னியர்கள் கந்தருவர் களித்துவளர் நாடு'
என்றுபல சொல்லியதைச் சொல்லளவில் நம்பி
எவனுக்கும் மண்டியிடும் ஏந்துபுய நாடு
ஆற்றுக் கரையருகே அணிவயல்கள் உண்டு
சோற்றுக்குத் திண்டாட்டம் சொல்லி முடியாது
வேதம் படித்திடுவோம் வெறுங்கைமுழம் போட்டிடுவோம்
சாதத்துக் காகச் சங்கரனை விற்றிடுவோம்
அத்தனைக்கும் மேலாக அஹிம்சைக் கதைபேசி
வித்தகராய்க் காந்தியை விற்றுப் பிழைக்கின்றோம்.

– புதுமைப்பித்தன்

# 8. விழாத விழாக்கள்

மாந்தரெல்லாம் ஆங்காங்கே ஒன்று கூடி
மகிழ்ந்துசெயும் செயல்யாவும் விழாக்கள் ஆகும்
ஏந்துபுகழ் மூவேந்தர் வாழ்ந்த நாளில்
எடுத்தவிழா பலவாகும்; இன்றோ மக்கள்
சாய்ந்தமனம் கொண்டிருக்கும் கார ணத்தால்
சத்தற்ற விழாக்களினால் பாழா கின்றார்;
தேய்ந்தகதை அதற்காக விழாக்கள் ; ஊரேல்
தேரோட்டம் ; வியாபார ஓசைக் கூட்டம் ! 1

தங்கத்தில் குறையிருந்தால் ஒப்புவோமா ?
சந்தனத்தில் சேறிருந்தால் பூசு வோமா ?
மங்கிக்கொண் டேயிருக்கும் மதங்கள் கூறும்
மௌடீக விழாக்களைநாம் நடத்த லாமா ?
சிங்கத்தை வளர்க்காமல் காட்டில் மேயும்
சிறுமுயல் வளர்ப்பதனால் பெருமை உண்டா ?
வங்கத்து ஞானிக்குச் சிலைகள் இங்கே
வடலூரார் போன்றோர்க்குச் சிலைகள் எங்கே ? 2

– சுரதா.

# 9. வாழ்க மானிடம்

வாழ்க மானிடம் அன்பும் இன்பமும்
மலர்க மண்மேலே - மன்பதை
வளர்க மென்மேலே

ஆழ்க டல்களின் ஆழ்ந்த சிந்தனையில்
ஆற்றல் விந்தையடா - மானிடர்
ஆயும் தெய்வமடா ! 1

கான்தி ரிந்தவர் இன்று பல்துறைக்
கலையின் மன்னரடா - மேதையர்
கனவின் வெற்றியடா

வான்பு குந்தவர் ஆய்வர் உண்மைகள்
மலர்வது காணாயோ - வாழ்வியல்
வளர்வது தேராயோ 2

அறம்நி றைந்தமெய் யறிவு வாழ்வினுக்
கழகு சேர்த்ததடா - செல்வம்
அள்ளி வளர்த்ததடா

மறம்த விர்ந்தநல் லன்பு நெஞ்சினில்
வளம் நிறைக்காதோ - இன்பம்
மடல் விரிக்காதோ. 3

– குலோத்துங்கன்

## 10. சமாதான தேவதை

சமாதான தேவதை
ஊர்வலம் வருகிறாள்
காகித வீதியில்
கருட வாகனத்தில்
சமாதான தேவதை
ஊர்வலம் வருகிறாள்

சிறகுக் குடல்கள்
ஒலிமலர் சொரிய
உந்திக் கொடிப்பூப்
பன்னீர் மணக்கச்
சங்கிலிச் சக்கர
நாத சுரங்கள்
மேளம் கொட்ட
வெண்புறாச் சிறகுத்
தோரணம் ஆடச்
சமாதான தேவதை
ஊர்வலம் வருகிறாள்

தவற விட்டால்
தரிசனம் கிடைக்காது
ஓடி வாருங்கள்
வேடிக்கை பார்க்கலாம்
சமாதான தேவதை
ஊர்வலம் வருகிறாள்

– அப்துல்ரகுமான்

# 11. விஞ்ஞானி

கல்வி யளித்துக் கசடகற்றும் கணக்காயர்
எல்லாரும் விரைவில் இறுதி விடைபெற்றுப்
பைய விலகிவிடப் பலநூலின் எண்ணத்தை
ஐயம் திரிபறவே அதிசயமாய்க் கற்பித்தும்
கேள்விக்குத் தக்கவிடை கேட்டும்நல் தேர்வுவைத்தும்
நாள்முழுதும் பாடம் நவில்கின்ற மின்னாற்றல்
எந்திரங்கள் கணக்காயர் இடத்தையெல்லாம் கைப்பற்ற
வந்தாலும் வரலாம்; வரச்செய்வான் விஞ்ஞானி !

சாதி சமயங்கள் சாத்திரங்கள் கோத்திரங்கள்
ஏதும் கருதாமல் இன்றைக்குக் கலப்புமணம்
மெதுவாய் நடக்கின்ற மேன்மைத் திறனறிந்து
பொதுவாய் வியப்போம்நாம்; பூரிப்போம்; இதனைவிட
மண்ணுலக மகனொருவன் மாலைப் பொழுதினிலே
விண்ணுலகில் ஏறி விளையாடப் போகுங்கால்
செவ்வாய் தனைத்திறந்து சிரித்துப்பூங் கையசைத்துச்
செவ்வாய்க் கிரகத்துச் சிங்காரி ஒருத்திவரக்
கண்டு மனத்துடிப்பைக் கண்மூலம் காட்டிக்கற்
கண்டு மொழியாளின் காதலையும் பெற்றுப்பின்
முதிய வயதுடையோர் முன்னின்று வாழ்த்துரைக்கப்
புதிய கலப்புமணம் புரியத் தொடங்குகின்ற
அந்தத் தனிநாளும் விரைவில் அதிவிரைவில்
வந்தாலும் வரலாம்; வரச்செய்வான் விஞ்ஞானி !

குற்றாலம் கொடைக்கானல் குயில்கூவிக் கொண்டிருக்கும்
வற்றாத எழில்மிக்க வையை அணைக்கட்டும்
மல்லைக் கலைநகரும் மற்றொன் றிதுபோல
இல்லை எனத்தக்க இனிய உதகையும்
ஈக்கடியும் கொசுக்கடியும் இருந்தாலும் தெரியாத
தேக்கடியும் மூணாறும் தேடி மகிழ்ச்சியினைக்
கரைத்துக் குடித்துக் கதைபேசிக் கண்ணாலே
சிரித்திருக்கும் காதலர்கள் செல்லாமல் நினைத்தவுடன்
சந்திரமண் டலம்செல்லும் விந்தைப் புதுநாளும்
வந்தாலும் வரலாம் ; வரச்செய்வான் விஞ்ஞானி.

**– மீரா.**

## 12. கவிஞன்

அவன் தன்
பாரங்களின் அழுத்தத்தில்
பரிதவித்து முனகுவதைக்
கவிதையென்று ரசிப்பீர்கள்

அவன் ஒரு
மயக்கத்தின் நிழலில்
வெறும் திரிகளைக்கையிலேந்தித்
தள்ளாடித் தவிப்பதையே
நடனமென்று ரசிப்பீர்கள்
அவன் புண்களைவண்டுகள்
பூக்களென்று மொய்த்துவரும்
பாதைகளில் படியாத அவன்
பாதப் பதிவுகளைச்
சரித்திரத்தாய், தன்
முகத்திலும் நெஞ்சிலும்
வாங்கிக் கொள்கிறாள்

இனம்புரியாஏக்கங்களை
இதயத் தொட்டிலிலிட்டு
அவன் பாடும்
ஈரமான தாலாட்டுக்களால்
உலகின்
உறக்கங்கள் உறங்கிவிடும்

இப்படியே தன்
நோய்களையே மற்றவர்க்கு
மருந்தாக்கிக்கொண்டு
சுற்றிவரும் அவனைக்
கண்டவர்கள் சொல்லுங்கள்
நானவனைக் காணவேண்டும்.

– அபி.

# 13. உனக்காகப் பாடுகிறேன்

சந்தையில் கூடி நின்று
தர்மத்தை விற்கும் இந்தச்
சிந்தையில் மாந்தர் தம்மைச்
சிறப்பித்துப் பாட மாட்டேன்;
சொந்தமே என்னை எண்ணித்
துடிக்கின்ற துணையே உன்னைச்
செந்தமிழ்ச் சந்தப் பண்ணாய்ச்
செய்யுளாய்ப் பாடு கின்றேன்! 1

பேரத்தில் வாழும் இந்தப்
பித்தருக் கெல்லாம் நெஞ்ச
ஓரத்தும் இடமே இல்லை
ஒருவரிப் பாட்டும் இல்லை;
தூரத்தில் இருந்தும் என்னைத்
தூண்டிடும் பெண்ணே உன்றன்
ஈரத்தை அன்பு கொண்ட
இதயத்தைப் பாடுகின்றேன். 2

மதித்திடத் தெரியா மாந்தர்
மன்றத்தில் கவிதை ஏந்திப்
புதைத்திடச் செல்ல மாட்டேன்
பொருள்விலை சொல்ல மாட்டேன்
கொதித்திடும் நெஞ்சத் திற்குக்
குளிர்தரும் நினைவே என்னைத்
துதித்திடும் நிலவே உன்னைத்
தொடர்ந்துநான் பாடு கின்றேன். 3

– மு.மேத்தா.

# 14. சீறத்தெரியாத எங்கள் ஊர்ப்பாம்புகள்

சிறப்பு அங்காடி முன்னும்
நியாயவிலைக் கடை
வாசல்களிலும்
நெளிந்து நெளிந்து
விஷமில்லாத
வெறும் பைவிரித்துத்
தலை சாய்த்திருக்கும்

மண்ணெண்ணெய் -
சர்க்கரை -
கோதுமை மாவுப்பாம்புகள்
க்யூவாய்ச் சுருண்டு
காத்துக் காத்துக்
காற்றைக் குடிக்கும்
'ஸ்டாக் இல்லை'என்ற
அறிவிப்புப் பலகை
வைத்ததும்
முணுமுணுப்போடு
ஆயிரங்காலால்
ஒட்டியவயிற்றுடன்
ஊர்ந்து மறையும்

படமெடுத்தாடவும்
பாயவும் சீறவும்
ஜீவனில்லாதவை -
ஐயோ பாவம்
எங்கள் ஊர்ப்பாம்புகள்.

— சிற்பி.

# 15. தகனம்

தகனம் தொடங்கும் வேளை வந்தது
கொண்டுவா தீப்பந்தம்
தகதக எனத்தீச் சுவாலையின் நாக்குகள்
தீமையை எரிக்கட்டும்

தனியுடை மையெனும் தாழ்பூட் டெல்லாம்
தகர்ந்து நொறுங்கட்டும்
பொதுவுடை மையெனும் புண்ணியக் கோயில்
தரிசனம் கிடைக்கட்டும்

சீதை மூழ்கிய தீயில் ராமன்
சந்தேகம் தகனம்
கண்ணகி மூட்டிய தீயில் அரசின்
கொடுங்கோன்மை தகனம்

உழைப்பவ னேஉன் உருக்குக் கைகளால்
ஊழல்க ளெல்லாம் தகனம்
உறுமி வெடிக்குமென் எரிமலைப் பாடல்
உனக்கா கத்தான் தகனம்

– புவியரசு.

## 16. மண்குதிரை

ஐந்தாண்டிற் கொருமுறையும்
சிலசமயம் அவசரமாகவும்
வர்ணமண் குதிரைகளில்
வாக்குறுதிகள் அமர்ந்து
அக்கரையில் வந்து
அமர்க்கள மாயிறங்கும்
இத்தரையில் நின்று நாங்கள்
ஏக்கமுடன் பார்த்திடுவோம்

ஆற்றில் இறங்கிய
அழகுமண் குதிரைகள்
ஆறேறி வந்ததில்லை
அழுதமுகம் பார்த்ததில்லை
கும்பிட்ட கரங்களோடு
குதிரைகளை இறக்கியவர்
மீண்டும் வருவார்
மீண்டும் இறங்குவார்
மண்குதிரை மாறி
இன்னும் ஒரு
மரக்குதிரை கூட வரவில்லை
என்று வரும்
ஒரு உயிர்க்குதிரை ?

– கந்தர்வன்.

## 17. வேறென்ன வேண்டும்

சொன்னபடி கேட்கின்ற உள்ளம் வேண்டும்
சொன்னால்தான் சாகின்ற தேகம் வேண்டும்
கண்ணோடு வாய்மைத்தீ கனல வேண்டும்
கருதுவதை உரைக்கின்ற உள்ளம் வேண்டும்
பண்கொண்ட இசைப்பாடல் பயில வேண்டும்
பறவைகளுக் கிருக்கின்ற சிறகுவேண்டும்
நன்மைகளைச் சுரண்டாத நட்பு வேண்டும்
நாளைக்குக் கலங்காத செல்வம் வேண்டும் 1

தெய்வத்தைத் தேடாத ஞானம் வேண்டும்
தெய்வங்கள் நாமென்று தெளிய வேண்டும்
பொய்சொன்னால் சுடுகின்ற நாவும் வேண்டும்
போராடி வெல்கின்ற புலமை வேண்டும்
கையிரண்டும் உழைக்கத்தான் கவனம் வேண்டும்
காலத்தின் மாற்றத்தை மதிக்க வேண்டும்
மெய்யிந்த வாழ்வென்று நம்ப வேண்டும்
மேகம்போல் பொழிந்துவிட்டுக் கலைய வேண்டும் 2

- **வைரமுத்து.**

# 18. பெண்ணே - நீ ?

வாழ்வியலைக் கண்டுயரக்
கல்லாமை துணையாவதா ?
நீ என்ன
மணமின்றிக்காட்சிதரும்
காகிதப் பூவா ?

நெஞ்சுரத்தால் நிமிர்ந்துநிற்க
இயலாமை துணையாவதா ?
நீஎன்ன
யார்யாரோ வாங்கிப் பயன்படுத்த
ஏலப்பொருளா ?

கொச்சைப் படுத்துவோரை வீழ்த்த
மௌனம்தான் துணையாவதா ?
நீ என்ன
காட்சிப் பொருளான
துணிக்கடைப் பதுமையா ?

தன்னிச்சையாய்ச் செயல்படத்
தடுமாற்றம் துணையாவதா ?
நீ என்ன
உயிர்ப்பே இல்லாத
அஃறிணைப் பொருளா ?

வல்லமையைப் பெருக்க
அறியாமை துணையாவதா ?
நீ என்ன
ஆடிப்பெருக்கில் விடப்பட்ட
தமிழ்ச்சுவடியா ?

– பு.மு.சாந்தமூர்த்தி.

# ஆசிரியர் குறிப்பு

## 1. பாரதியார்

தமிழகம் தந்த தேசியக் கவிஞர். விடுதலைப் போராட்டக் கவிதைகளால் தம் காலத்திலேயே புகழ் பெற்றவர். நாடு, மொழி, இனம், நாட்டுவிடுதலை, பெண்விடுதலை எனப் பலதுறைகளில் பாடியவர். கண்ணன்பாட்டு, குயில் பாட்டு, பாஞ்சாலி சபதம் ஆகிய மூன்றும் பாரதியாரின் சிறந்த படைப்புகளாகும்.

## 2. பாரதிதாசன்

இயற்பெயர் கனக சுப்புரத்தினம். 'எங்கெங்குக் காணினும் சக்தியடா' என்ற தொடக்கத்து .முதற்பாடல் வாயிலாகப் பாரதியின் நெருக்கமான நண்பரானவர். தொடக்கத்தில் கடவுள் நெறிக் கவிதைகள் தந்த பாரதிதாசன், தந்தை பெரியாருடன் இணைந்த பின்னர்ச் சமுதாயம். பெண் விடுதலை, இளமை மணமறுப்பு, விதவைத் திருமணம், தொழிலாளர் நலன், நாடு, மொழி, இனம், இந்தித் திணிப்பு எதிர்ப்பு எனப் பல நிலைகளில் பாடி இறுதிவரை பெரியார் கொள்கைகளுடன் வாழ்ந்தவர். பாவேந்தர் என்று அழைக்கப்பட்ட இவர் 'குயில்' என்ற பெயரில் கவிதை ஏடு நடத்தினார் ! அழகின் சிரிப்பு, பாண்டியன் பரிசு, தமிழியக்கம், குறிஞ்சித்திட்டு, தமிழச்சியின் கத்தி, எதிர்பாராத முத்தம் போன்ற நூல்களைத் தந்தவர். தமக்கென ஒரு பரம்பரையை உண்டாக்கிய பெருமைக்கு உரியவர்.

### 3. கவிமணி தேசிகவிநாயகம்

ஆசிய சோதி, மலரும் மாலையும் ஆகிய தொகுதிகள் கவிமணியின் சிறந்த படைப்புகளாகும். 'மருமக்கள் வழிமான்மியம்' என்னும் கவிதை நூல் நாஞ்சில் நாட்டில் இருந்த பழக்கத்தைக் கருவாகக் கொண்டமைந்தது. புத்தரின் வாழ்க்கையைக் கூறுவது ஆசிய சோதி. உமர்கய்யாம் பாடல்களையும் இவர் தமிழாக்கம் செய்துள்ளார். இவரும் பெண் கல்வியைச் சிறப்பித்துப் பாடியவர்.

### 4. சதாவதானி செய்குதம்பிப் பாவலர்

நாகர்கோவிலில் பிறந்தவர். விடுதலைப் போராட்டத்தில் தீவிரமாகப் பங்கேற்றவர். சீறாப் புராணத்திற்கு உரையெழுதிப் பதிப்பித்தவர். நபிகள் நாயக மான்மிய மஞ்சரி, திருக்கோட்டாற்றுப் பதிற்றுப்பத்தந்தாதி, திருநாகூர்த் திருப்பத்தந்தாதி முதலிய நூல்கள் இயற்றியவர். இவரது தமிழ்த் தொண்டினை நினைவு கூர்ந்து தமிழக அரசு இவர் பிறந்த ஊரில் மணி மண்டபம் ஒன்றினை எழுப்பியுள்ளது.

### 5. கண்ணதாசன்

இயற்பெயர் முத்தையா. தென்றல், முல்லை, கண்ணதாசன் என்ற பெயர்களில் இலக்கிய ஏடுகளை நடத்தியவர். தென்றலில் இவர் நடத்திய 'வெண்பாப் போட்டி' இலக்கிய வரலாற்றில் இடம் பெறத்தக்கது. கண்ணதாசன் கவிதைத் தொகுப்புகள் எட்டு வெளிவந்துள்ளன. பத்துத் தொகுதிகளாக இவருடைய 'அர்த்தமுள்ள இந்துமதம்' வெளியாகியிருக்கிறது. மாங்கனி, தைப்பாவை, ஆட்டனத்தி ஆதிமந்தி போல்வன இவருடைய சிறந்த படைப்புகளாகும். திரைப்பாடல்களை இலக்கியத் தரத்திற்கு உயர்த்தியவர். 'கண்ணே கலைமானே' என்ற இறுதிப் பாடல் வரைக்கும் திரை உலகில் முடிசூடாமன்னராகவே விளங்கினார். 'இயேசுகாவியம்' இவருடைய இறுதிப் படைப்பாகும்.

### 6. பட்டுக்கோட்டைகல்யாண சுந்தரம்

பொதுவுடைமைத் தத்துவத்தில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டவர். திரைப்பாடல்களில் தம்முடைய முத்திரையைச் சிறப்பாகப் பதித்தவர். 'தூங்காதே தம்பி தூங்காதே' 'சின்னப்பயலே சின்னப்பயலே' 'திருடாதே பாப்பா திருடாதே' போன்ற பாடல்கள் காலத்தை வென்று என்றும் வாழ்வன. காதல் பாட்டென்றாலும் கடவுள் பாட்டென்றாலும் அங்கும் பொதுவுடைமை எண்ணங்களை மறக்காமல் வெளிப்படுத்தியவர்.

### 7. புதுமைப்பித்தன்

இயற்பெயர் விருத்தாசலம். 'சிறுகதை மன்னன்' என்ற சிறப்பிற்குரியவர். 'கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும்' என்ற கதை, சிறுகதை வரலாற்றில் தனித்தன்மையுடன் திகழ்வது. நையாண்டிக் கவிதைகளைச் சிறப்பாக எழுதியுள்ளார்.

### 8. சுரதா

சுப்புரத்தின தாசன் என்பதில் மூன்று சொற்களில் உள்ள முதல் எழுத்துகளைச் சேர்த்துச் சுரதா என்றாக்கிக் கொண்டவர். உவமைக்கவிஞர் என்ற சிறப்பிற்கு உரியவர். இலக்கியம், சுரதா என்ற பெயர்களில் கவிதைகளாலேயே ஆன ஏடுகளை நடத்தியவர். 'அமுதும் தேனும் எதற்கு' என்ற பாடலும் 'ஆடி அடங்கும் வாழ்க்கையடா' என்ற பாடலும் இவருடைய புலமைக்குச் சான்றாவன. 'தேன் மழை' என்ற கவிதைத் தொகுப்பிற்காகத் தஞ்சைத் தமிழ்ப்பல்கலைக்கழகத்தின் இராசராசன் விருது பெற்றுள்ளார்.

## 9. குலோத்துங்கன்

இயற்பெயர் குழந்தைசாமி. அறிவியல் அறிஞர். அண்ணா தொழில் நுட்பப்பல்கலைக்கழகம், மதுரை காமராசர் பல்கலைக் கழகம் ஆகியவற்றின் துணைவேந்தராகச் செயலாற்றியவர். இந்திரா காந்தி தேசிய திறந்த வெளிப் பல்கலைக்கழகத் துணைவேந்தராக இருக்கிறார். தந்தை பெரியார் கருத்துகளில் ஈடுபாடுள்ள இவர் சிறந்த சிந்தனையாளர். தமிழில் எல்லாத் துறைகளிலும் நூல்கள் வரவேண்டும்; அறிவியல் தமிழ் மேலும் சிறக்க வேண்டும் என்பதில் பேரார்வம் மிக்கவர். நல்ல கவிஞர்.

## 10. அப்துல் ரகுமான்

புதுக்கவிதை வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க பங்காற்றியவர் 'புதுக்கவிதைகளில் குறியீடு' என்னும் ஆய்விற்காக முனைவர் பட்டம் பெற்றவர். சப்பானிய 'ஐக்கூ" கவிதை அமைப்புத் தமிழில் இடம் பெற வித்திட்டவர். பால்வீதி, சுட்டுவிரல், ஆலாபனை, முட்டைவாசிகள், மரணம் முற்றுப்புள்ளி அல்ல என்பன இவருடைய படைப்புகளுள் சில.

## 11. மீரா

மீ. இராசேந்திரன், மன்னர் துரைசிங்கம் அரசு கலைக் கல்லூரித் தமிழ்த் துறைத்தலைவர். 'அன்னம்' வெளியீடுகளின் மூலம் சிறந்த படைப்பிலக்கியங்களைத் தமிழில் வெளியிடுகிறார். 'ஊசிகள்' என்ற தலைப்புக்கவிதைத் தொகுப்பு நையாண்டிச் சுவைமிக்கது. இராசேந்திரன் கவிதைகள் (முதல் தொகுதி), மூன்றும் ஆறும் (கவியரங்கக் கவிதைகள்) இவருடைய படைப்புகள். 'கனவுகள் + கற்பனைகள் = காகிதங்கள்' என்ற நூல் சிறப்பாகப் பேசப்பட்ட நூல்.

## 12. அபி

காரைக்குடி, அழகப்பா அரசினர் கலைக் கல்லூரியில் தமிழ்த் துறைத் தலைவராக உள்ள அபிபுல்லா, அபி என்ற பெயரில் படைப்பிலக்கியங்களை வெளியிட்டுள்ளார். 'மௌனத்தின் நாவுகள்' என்னும் புதுக்கவிதைத் தொகுப்பு, அபியின் புதிய சிந்தனை வளத்திற்குச் சான்றாகும். 'என்ற ஒன்று', 'அந்தர நடை' என்பன இவருடைய பிற படைப்புகளாகும்.

## 13. மு. மேத்தா

சென்னை, புதுக்கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர். திரைப்படத் துறையிலும் அடியெடுத்து வைத்தவர். ஆனந்த விகடன் நடத்திய நாவல் போட்டியில் முதற்பரிசு பெற்றவர். ' காந்தியடிகளுக்கு ஒரு தெருப்பாடகனின் அஞ்சலி என்ற கவிதை, பரவலாகச்செல்வாக்குப் பெற்றது,

## 14. சிற்பி

சிற்பி பாலசுப்பிரமணியன், பாரதியார் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத்தலைவர். சிற்பி என்ற பெயரில் படைப்பிலக்கியப் பணிபுரிகிறார். .ஒளிப்பறவை, சர்ப்பயாகம், சூரிய நிழல், சிரித்த முத்துக்கள் என்பன இவருடைய கவிதைப் படைப்புகளாகும். 'ஆதிரை' என்ற தலைப்பில் கவிதை நாடகம் எழுதியுள்ளார்.

## 15. புவியரசு

முற்போக்குச் சிந்தனையுடன் புதுக்கவிதை எழுதுபவர். 'வானம்பாடி'க் கவிதை இயக்கத்தின் மூலவர்களுள் ஒருவர். மரபுக் கவிதை, புதுக்கவிதை இரண்டிலும் தேர்ந்தவர். 'வயது' என்ற நாடகம், நவீன நாடக உத்தி உடையது. இதுதான், அவசர அழைப்பு என்பன இவருடைய கவிதைப்

படைப்புகள். சுஜாதாவின் 'கரையெல்லாம் செண்பகப்பூ' என்ற நாவலை திரைக்கதையாக எழுதியிருக்கிறார்

16. **கந்தர்வன்**

முற்போக்கு எழுத்தாளர். கவிதைகள், சிறுகதைகள் வெளியிட்டுள்ளார். கிழிசல்கள், மீசைகள், சிறைகள் எனக் கவிதை நூல்கள் வெளியிட்டுள்ளார். ' பூவுக்குக் கீழே ' என்பது இவரது சிறுகதைத் தொகுப்பாகும்.

17. **வைரமுத்து**

இன்றைய திரைக்கவிஞர்களுள் முன்னணியில் இருப்பவர். புதுக்கவிதைப் பாங்குடன் திரைப்பாடல்கள் எழுதுவது இவருடைய தனிச் சிறப்பு. சிறந்த திரைப்படப்பாடலாசிரியர் என்பதற்காகத் தேசிய அளவில் இந்திய அரசின் விருது பெற்றவர். கவிதை நூல்கள் பல வெளியிட்டுள்ளார்.

18. **சாந்தமூர்த்தி**

மதுரை, சௌராட்டிரக் கல்லூரித் தமிழ்த் துறைத் தலைவர். 'கம்ப ராமாயணத்தில் உருக்காட்சி' என்ற ஆய்விற்காக முனைவர் பட்டம் பெற்றவர். ஏராளமான கவியரங்குகளில் பங்கேற்றவர். மரபுக் கவிதை, புதுக்கவிதை இரண்டிலும் ஈடுபாடுள்ளவர்.

# இரண்டாம் பருவம்

## இடைக்கால இலக்கியம்

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | தேவாரம் | - திருநாவுக்கரசர் |
| 2. | நாச்சியார் திருமொழி | - ஆண்டாள் |
| 3. | திருவாசகம் | - மாணிக்க வாசகர் |
| 4. | திருமந்திரம் | - திருமூலர் |
| 5, | திருமாலை | - தொண்டரடிப் பொடியாழ்வார் |
| 6. | கலிங்கத்துப் பரணி | - செயங் கொண்டார் |
| 7. | பராபரக்கண்ணி | - தாயுமானவர் |
| 8. | திருவருட்பா | - வடலூர் இராமலிங்க வள்ளலார் |
| 9. | முக்கூடற்பள்ளு | - |
| 10. | திருக்குற்றாலக் குறவஞ்சி | - திரிகூட ராசப்பக் கவிராயர் |
| 11. | சித்தர் பாடல்கள் | - சிவவாக்கியர் |

# 1. தேவாரம்

ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடா தாரே
அடக்குவித்தால் ஆரொருவர் அடங்காதாரே
ஓட்டுவித்தால் ஆரொருவர் ஓடாதாரே
உருகுவித்தால் ஆரொருவர் உருகா தாரே
பாட்டுவித்தால் ஆரொருவர் பாடா தாரே
பணிவித்தால் ஆரொருவர் பணியா தாரே
காட்டுவித்தால் ஆரொருவர் காணா தாரே
காண்பாரார் கண்ணுதலாய்க் காட்டாக் காலே 1

திருநாமம் அஞ்செழுத்தும் செப்பா ராகில்
தீவண்ணர் திறமொருகால் பேசா ராகில்
ஒருக்காலும் திருக்கோயில் சூழா ராகில்
உண்பதன்முன் மலர்பறித்திட் டுண்ணா ராகில்
அருநோய்கள் கெடவெண்ணீ றணியா ராகில்
அளியற்றார் பிறந்தவா றேதோ என்னில்
பெருநோய்கள் மிகநலியப் பெயர்த்தும் செத்தும்
பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின் றாரே 2

நின்னாவார் பிறரன்றி நீயே யானாய்
நினைப்பார்கள் மனத்துக்கோர் வித்து மானாய்
மன்னானாய் மன்னவர்க்கோர் அமுத மானாய்
மறைநான்கு மானாய்ஆ றங்க மானாய்
பொன்னானாய் மணியானாய் போக மானாய்
பூமிமேல் புகழ்தக்க பொருளே உன்னை
என்னானாய் என்னானாய் என்னி னல்லால்
ஏழையேன் என்சொல்லி ஏத்து வேனே. 3

சங்கநிதி பதுமநிதி இரண்டும் தந்து
தரணியொடு வானாளத் தருவ ரேனும்
மங்குவார் அவர்செல்வம் மதிப்போ மல்லோம்
மாதேவர்க் கேகாந்தர் அல்ல ராகில்
அங்கமெலாம் குறைந்தழுகு தொழுநோ யராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்ப ராகில்
அவர்கண்டீர் நாம்வணங்கும் கடவு ளாரே. 4

— திருநாவுக்கரசர்

# 2. நாச்சியார் திருமொழி

கருப்பூரம் நாறுமோ கமலப்பூ நாறுமோ
திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித் திருக்குமோ
மருப்பொசித்த மாதவன்தன் வாய்ச்சுவையும் நாற்றமும்
விருப்புற்றுக் கேட்கின்றேன் சொல்லாழி வெண்சங்கே 1

சந்திர மண்டலம்போல் தாமோ தரன்கையில்
அந்தர மொன்றின்றி யேறி அவன்செவியில்
மந்திரம் கொள்வாயே போலும் வலம்புரியே
இந்திரனும் உன்னோடு செல்வத்துக் கேலானே. 2

செங்கமல நாள்மலர்மேல் தேனுகரும் அன்னம்போல்
செங்கண் கருமேனி வாசுதே வனுடைய
அங்கைத் தலமேறி அன்ன வசம்செய்யும்
சங்கரையா உன்செல்வம் சால அழகியதே. 3

உண்பது சொல்லி உலகளந்தான் வாயமுதம்
கண்படை கொள்ளில் கடல்வண்ணன் கைத்தலத்தே
பெண்படையா ருன்மேல் பெரும்பூசல் சாற்றுகின்றார்
பண்பல செய்கின்றாய் பாஞ்சசன் னியமே 4

பதினாறா மாயிரவர் தேவிமார் பார்த்திருப்ப
மதுவாயில் கொண்டாற்போல் மாதவன்தன் வாயமுதம்
பொதுவாக உண்பதனைப் புக்குநீ உண்டக்கால்
சிதையாரோ உன்னோடு செல்வப் பெருஞ்சங்கே. 5

**– ஆண்டாள்**

# 3. திருவாசகம்

பருவரை மங்கைதன் பங்கரைப் பாண்டியற் காரமுதாம்
ஒருவரை ஒன்றும் இலாதவ ரைக்கழல் போதிறைஞ்சித்
தெரிவர நின்றுரு கிப்பரி மேற்கொண்ட சேவகனாம்
ஒருவரை யன்றி உருவறி யாதென்றன் உள்ளமதே. 1

நீரின்ப வெள்ளத்துள் நீந்திக் குளிக்கின்ற நெஞ்சங் கொண்டீர்
பாரின்ப வெள்ளங் கொளப்பரி மேற்கொண்ட பாண்டியனார்
ஓரின்ப வெள்ளத் துருக்கொண்டு தொண்டரை உள்ளங்கொண்டார்
பேரின்ப வெள்ளத்துட் பெய்கழ லேசென்று பேணுமினே.. 2

செறியும் பிறவிக்கு நல்லவர் செல்லல்மின் தென்னன் நன்னாட்டு
இறைவன் கிளர்கின்ற காலம் இக்காலம் எக்காலத் துள்ளும்
அறிவுஒண் கதிர்வாள் உறைகழித் தானந்தம் மாக்கடவி
எறியும் பிறப்பை எதிர்ந்தவர் புரள இருநிலத்தே 3

காலமுண் டாகவே காதல் செய் துய்ம்மின் கருதரிய
ஞாலமுண் டானொடு நான்முகன் வானவர் நண்ணரிய
ஆலமுண் டானெங்கள் பாண்டிப் பிரான்தன் அடியவர்க்கு
மூலபண் டாரம் வழங்குகின் றான்வந்து முந்துமினே. 4

அழிவின்றி நின்றதொ ரானந்த வெள்ளத் திடையழுத்திக்
கழிவில் கருணையைக் காட்டிக் கடிய வினையகற்றிப்
பழமலம் பற்றறுத் தாண்டவன் பாண்டிப் பெரும்பதமே
முழுதுல குந்தரும் வான்கொடை யேசென்று முந்துமினே. 5

**– மாணிக்கவாசகர்**

# 4. திருமந்திரம்

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிவார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே. 1

படமாடக் கோயிற் பகவற்கொன் றீயில்
நடமாடக் கோயில் நம்பர்க்கங் காகா
நடமாடக் கோயில் நம்பர்க்கொன் றீயில்
படமாடக் கோயில் பகவற்க தாமே. 2

ஒன்றே குலனும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை நாணாமே
சென்றே புகுங்கதி யில்லைநும் சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந் துய்ம்மினே. 3

உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே. 4

சாத்திரம் ஓதும் சதுர்களை விட்டுநீர்
மாத்திரைப் போது மறித்துள்ளே நோக்குமின்
பார்த்தவப் பார்வை பசுமரத் தாணிபோல்
ஆர்த்த பிறவி அகலவிட் டோடுமே. 5

**– திருமூலர்**

# 5. திருமாலை

குடதிசை முடியை வைத்துக்
குணதிசை பாதம் நீட்டி
வடதிசை பின்பு காட்டித்
தென்திசை இலங்கை நோக்கிக்
கடல்நிறக் கடவு ளெந்தை
அரவணைத் துயிலு மாகண்டு
உடலெனக் குருகு மாலோ
என்செய்கேன் உலகத் தீரே. 1

மனத்திலோர் தூய்மை இல்லை
வாயிலோர் இன்சொல் இல்லை
சினத்தினால் செற்றம் நோக்கித்
தீவிளி விளிவன் வாளா;
புனத்துழாய் மாலை யானே
பொன்னிசூழ் திருவ ரங்கா
எனக்கினிக் கதியென் சொல்வாய்
என்னையா ளுடைய கோவே 2

பழுதிலா ஒழுக லாற்றுப்
பலசதுப் பேதி மார்கள்
இழிகுலத் தவர்க ளேனும்
எம்மடி யார்க ளாகில்
தொழுமின் கொடுமின் கொள்மின்
என்றுநின் னோடு மொக்க
வழிபட அருளி னாய்போன்ம்
மதிள்திரு வரங்கத் தானே. 3

அமரவோ ரங்க மாறும்
வேதமோர் நான்கு மோதி
தமர்களில் தலைவ ராய
சாதியந் தணர்க ளேனும்
துயர்களைப் பழிப்ப ராகில்
நொடிப்பதோ ரளவில் ஆங்கே
அவர்கள்தாம் புலையர் போலும்
அரங்கமா நகரு ளானே. 4

– தொண்டரடிப்பொடியாழ்வார்

# 6. கலிங்கத்துப்பரணி

## இராசபாரம்பரியம்—

### கரிகாலன் பட்டினப்பாலை கொண்டது

தத்து நீர்வரால் குருமி வென்றதும்
தழுவு செந்தமிழ்ப் பரிசில் வாணர்பொன்
பத்தொ டாறுநூ றாயி ரம்பெறப்
பண்டு பட்டினப் பாலை கொண்டதும் 1

### கரிகாலன் சோழ பாண்டியரை வென்றது

ஒருவர் முன்னோர்நாள் தந்து பின்செலா
உதியர் மன்னரே மதுரை மன்னரென்று
இருவர் தம்மையும் கிழிகள் சுற்றுவித்து
எரிவி ளக்குவைத்து இகல்வி ளைத்ததும் 2

### பராந்தக சோழன் பெருமை

வேழ மொன்றுதைத்து ஆவி விண்ணின்வாய்
விசைய டங்கவும் அசைய வென்றதும்
ஈழ முத்தமிழ்க் கூட லும்சிதைத்து
இகல்க டந்ததோர் இசைப ரந்ததும் 3

### இராசராசன் பெருமை

சதய நாள்விழா உதியர் மண்டலம்
தன்கை வைத்தவன் தனிவோர் மாவின்மேல்
உதய பானுவொத்து உதகை வென்றகோன்
ஒருகை வாரணம் பலக வர்ந்ததும் 4

### இராசேந்திர சோழன் பெருமை

களிறு கங்கைநீர் உண்ணும் மண்ணையில்
காய்சி னத்தோடே கலவு செம்பியன்
குளிறு தெண்டிரைக் குரைக டாரமும்
கொண்டு மண்டலம் குடையுள் வைத்ததும் 5

**இராசேந்திரதேவன் பெருமை**

ஒருக ளிற்றின்மேல் வருக ளிற்றையொத்து
உலகு யக்கொளப் பொருது கொப்பையிற்
பொருக ளத்திலே முடிக வித்தவன்
புவிக விப்பதோர் குடைக வித்ததும். 6

**குலோத்துங்கன் தோற்றம்**

குந்தளரைக் கூடற்சங்கத்து வென்ற
கோனபயன் குவலயங்காத் தளித்த பின்னை
இந்தநிலக் குலப்பாவை இவன்பாற் சேர
என்னதவம் செய்திருந்தான் என்னத் தோன்றி 7

எவ்வளவு திரிபுவன முளவாய்த் தோன்றும்
எவ்வளவு குலமறைகள் உளவாய் நிற்கும்
அவ்வளவு திகிரிவரை யளவும் செங்கோல்
ஆணைசெல்ல அபயன் காத்தளிக் குமாறும் 8

இப்பு றத்திலே மால்வரையின் மார்பி னகலத்து
எழுதி னானெழுது தற்கரிய வேதமெழுதி
ஒப்பு றத்தனது தொன்மரபுமம் மரபின்மேல்
உரைசெய் பல்புகழுமொன் றுமொழியாத பரிசே 9

**காளி மகிழ்ந்து கூறல்**

வையகமாம் குலமடந்தை மன்னபயன்
தன்னுடைய மரபு கேட்டே
ஐயனையான் பெற்றெடுத்த அப்பொழுதும்
இப்பொழுதொத் திருந்த தில்லை. 10

**– செயங்கொண்டார்**

# 7. பராபரக் கண்ணி

அன்பைப் பெருக்கியென தாருயிரைக் காக்கவந்த
இன்பப் பெருக்கே இறையே பராபரமே. 1

என்புருகி நெஞ்சம் இளகிக் கரைந்துகரைந்து
அன்புருவாய் நிற்க அலந்தேன் பராபரமே 2

எண்ணாத எண்ணமெலாம் எண்ணியெண்ணி ஏழைநெஞ்சம்
புண்ணாகச் செய்ததினிப் போதும் பராபரமே. 3

நன்றறியேன் தீதறியேன் நானென்று நின்றவனார்
என்றறியேன் நானேழை என்னே? பராபரமே 4

அன்னையிலாச் சேய்போல் அலக்கணுற்றேன் கண்ணார
என்னகத்தில் தாய்போல் இருக்கும் பராபரமே 5

வந்தித்து நின்னை மறவாத கடனாகச்
சிந்திக்க நின்னதருள் செய்யாய் பராபரமே. 6

எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி இரங்கவுன்
தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே. 7

ஒன்றைநினைத் தொன்றைமறந் தோடுமன மெல்லாநீ
என்றறிந்தால் எங்கே இயங்கும் பராபரமே. 8

அன்பாற் கரைந்துகண்ணீர் ஆறுகண்ட புண்ணியருக்கு
உன்பால் வரவழிதான் உண்டோ பராபரமே. 9

நெஞ்சகமே கோயில் நினைவேசுகந் தம்அன்பே
மஞ்சனநீர் பூசைகொள்ள வாராய் பராபரமே. 10

எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லால் வேறொன் றறியேன் பராபரமே. 11

கல்லாதேன் ஆனாலும் கற்றுணர்ந்த மெய்யடியார்
சொல்லாலே நின்னைத் தொடர்ந்தேன் பராபரமே. 12

— தாயுமானவர்

# 8திருவருட்பா

இரவிலே பிறர்தம் இடத்திலே இருந்த
இருப்பெலாம் கள்ளர்கள் கூடிக்
கரவிலே கவர்ந்தார் கொள்ளையென் றெனது
காதிலே விழுந்தபோ தெல்லாம்
விரைவிலே நெருப்பை மெய்யிலே மூட்டி
வெதுப்பல்போல் வெதும்பினேன் எந்தாய்
உரவிலே ஒருவர் திடுக்கென வரக்கண்
டுளநடுக் குற்றனன் பலகால். 1

நலிதரு சிறிய தெய்வமென் றையோ
நாட்டிலே பலபெயர் நாட்டிப்
பலிதர ஆடு பன்றிகுக் குடங்கள்
பலிக்கடா முதலிய உயிரைப்
பொலிவுறக் கொண்டே போகவுங் கண்டே
புந்திநொந் துளநடுக் குற்றேன்
கலியுறு சிறிய தெய்வவெங் கோயில்
கண்டகா லத்திலும் பயந்தேன். 2

சாதியும் மதமும் சமயமும் தவிர்ந்தேன்
சாத்திரக் குப்பையும் தணந்தேன்
நீதியும் நிலையும் சத்தியப் பொருளும்
நித்திய வாழ்க்கையும் சுகமும்
ஆதியும் நடுவும் அந்தமும் எல்லாம்
அருட்பெருஞ் சோதியென் றறிந்தேன்
ஓதிய அனைத்தும் நீயறிந் ததுதான்
உரைப்பதென் அடிக்கடி உனக்கே. 3

– வடலூர் இராமலிங்க வள்ளலார்

# 9. முக்கூடற் பள்ளு

### ஆற்றுவெள்ளம் குறிஞ்சியில் பாய்தல்

வானக் குரிசில் வள்ளலாய் - வரைக்
கோனைப் பரிசு கொள்ளலாய்
லழங்கு மாறும் புறப்பட்டதே - புனல்
முழங்கு மாறும் திறப்பட்டதே
தானக் களிறு படித்திடக் - கொலை
ஏனக் களிறு மடிந்திடத்
தழையின் ஆரம் உந்தியும் - பசுங்
கழையின் ஆரம் சிந்தியும்
கானக் குளவி அலையவே - மது
பானக் குளவி கலையவே
காட்டுச் சாதி வேரிற்போய்க் - குற
மோட்டுச் சாதி ஊரிற்போய்ச்
சேனைப் புரவி அழகனார் - மரு
கோனைப் பரவி அழகுபூந்
தினையை வனத்தில் உதிர்த்துப் - பாலை
அனைய வனத்தை எதிர்ந்ததே 1

### ஆற்றுவெள்ளம் மருதத்தில் பாய்தல்

பாயும் மருதம் செழிக்கவே - பணை
தோயும் மருதம் தழைக்கவே
பகட்டுக் கமலை வட்டத்தில் - புனல்
தகட்டுக் கமலைக் குட்டத்தில்
போயும் எருமை பதறவே - உர
மீயும் எருமை சிதறவே
புழுதிச் சாலை நனைத்துமே - குளிர்
கொழுதிச் சாலை அனைத்துமே

சாயும் உரலும் கரும்புந்தான் - அதில்
பாயும் முரலும் சுரும்புந்தான்
சரிய முதலை முடுக்கியும் - வாழைப்
பெரிய முதலை அடுக்கியும்
காயும் தவள வாரணம் - எதிர்
ஆயுந் தவள வாரணம்
கழனிக் குடிலைத் தொகுத்து - நெய்தலந்
துழனிக் குடிலிற் புகுந்ததே. 2

**ஆற்று வெள்ளம் நெய்தலில் பாய்தல்**

புகுந்த நெய்தலை மயக்கியே - மலர்
மிகுந்த நெய்தலைக் கயக்கியே
புடையிற் புளினஞ் சரியவே - அதன்
இடையிற் புளினம் இழியவே
புகுந்து நுழையப் பட்டினம் - திரை
முகந்து நுழையப் பட்டினம்
படைத்தி டாமை நிகழவே - நிலை
கிடைத்தி டாமை யிகழவே
உகுந்த தண்டலை நீக்கியே - புனல்
வகுந்த தண்டலை தாக்கியே
உப்பளத் தாரை யோட்டியும் - புனல்
அப்பளத் தாரை யீட்டியும்
தகுந்த டங்கடல் இறைவனைத் - தொழ
மகிழ்ந்தி டுங்கடன் முறையினிற்
சார்ந்து சுறவு நேர்ந்து - குறுக
வார்ந்து வெள்ளம் ஊர்ந்ததே. 3

# 10. திருக்குற்றாலக் குறவஞ்சி

தண்ணமு துடன்பிறந்தாய் வெண்ணிலாவே - அந்தத்
தண்ணளியை ஏன்மறந்தாய் வெண்ணிலாவே
பெண்ணுடன் பிறந்ததுண்டே வெண்ணிலாவே - என்றன்
பெண்மைகண்டும் காயலாமோ வெண்ணிலாவே. 1

விண்ணிலே பிறந்ததற்கோ வெண்ணிலாவே - எரு
விட்டுநான் எறிந்ததற்கோ வெண்ணிலாவே
கண்ணில்விழி யாதவர்போல் வெண்ணிலாவே - மெத்தக்
காந்தியாட்டம் ஆடுகிறாய் வெண்ணிலாவே. 2

ஆகடியம்செய் தல்லவோ வெண்ணிலாவே - நீதான்
ஆட்கடியன் போற்குறைந்தாய் வெண்ணிலாவே
மோகன்வரக் காணேனென்றாய் வெண்ணிலாவே - இந்த
வேகமுனக் கானதென்ன வெண்ணிலாவே. 3

நாகமென்றே எண்ணவேண்டாம் வெண்ணிலாவே - இது
வாகுகுழல் பின்னல்கண்டாய் வெண்ணிலாவே
கோகனக வீறழித்தாய் வெண்ணிலாவே - திரி
கூடலிங்கர் முன்போய்க் காய்வாய் வெண்ணிலாவே. 4

**–திரிகூட ராசப்பக் கவிராயர்**

# 11. சிவவாக்கியர் பாடல்கள்

நாலு வேத மோதுவீர் ஞான பாதம் அறிகிலீர்
பாலுள் நெய்க லந்த பாவி காள றிகிலீர்
ஆல முண்ட கண்டனார் அகத்து ளேயி ருக்கவே
கால னென்று சொல்லுவீர் கனவி லும்மஃ தில்லையே 1

கோயி லாவ தேதடா குளங்க ளாவ தேதடா
கோயி லுங்கு ளங்களும் கும்பி டுங்கு லாமரே
கோயி லும்ம னத்துளே குளங்க ளும்ம னத்துளே
ஆவ தும்ம ழிவதுவும் இல்லை இல்லை இல்லையே 2

சாதி யாவ தேதடா சலந்தி ரண்ட நீரெலாம்
பூத வாச லொன்றலோ? பூத மைந்து மொன்றலோ?
காதில் வாளி காரைகம்பி பாட கம்பொ ருளொன்றலோ?
சாதி பேதம் ஓதுகின்ற தன்மை என்ன தன்மையே. 3

சிட்ட ரோதும் வேதமும் சிறந்த ஆக மங்களும்
நட்ட கார ணங்களும் நவின்ற பொய்ம்மை நூல்களும்
கட்டி வைத்த போதகங் கதைக்கு கந்த பித்தெலாம்
பெட்ட முதாய்மு டிந்ததே பிரானை யான றிந்தபின் 4

ஊரி லுள்ள மனிதர்காள் ஒருமை மனமாய்க் கூடியே
தேரி லேவடத் தையிட்டுச் செம்பை வைத்தி ழுக்கிறீர்
ஆரி னாலு மறியொணாத ஆதி சித்த நாதரைப்
போரி லான மனிதர்பண்ணும் புரளி பாரும் பாருமே. 5

ஓசை யுள்ள கல்லைநீர் உடைத்தி ரண்டு செய்துமே
வாச லிற்ப தித்தகல்லை மழுங்க வேமி திக்கிறீர்
பூச னைக்கு வைத்தகல்லில் பூவும் நீரும் சார்த்துறீர்
ஈசனுக்கு கந்தகல்லும் எந்தக் கல்லு சொல்லுமே. 6

# மூன்றாம் பருவம்

## காப்பிய இலக்கியம்

# பொருளடக்கம்


1. சிலப்பதிகாரம் - வஞ்சின மாலை
2. பெரிய புராணம் - அரிவாள் தாயநாயனார்
3. கம்பராமாயணம் - வாலிவதைப் படலம்
4. சீறாப்புராணம் - கிசுரத்துக் காண்டம் - விடமீட்ட படலம்
5. தேம்பாவணி - நகரப்படலம்

# 1. சிலப்பதிகாரம்

## வஞ்சின மாலை

( கற்புடை மங்கையர் எழுவர் )

கோவேந்தன் தேவி கொடுவினை யாட்டியேன்
யாவும் தெரியா இயல்பினேன் ஆயினும்
முற்பகல் செய்தான் பிறன்கேடு தன்கேடு
பிற்பகல் காண்குறூஉம் பெற்றியகாண் நற்பகலே
வன்னி மரமும் மடைப்பளியும் சான்றாக
முன்னிறுத்திக் காட்டிய மொய்குழலாள் பொன்னிக்
கரையின் மணற்பாவை நின்கணவ னாமென்று
உரைசெய்த மாதரொடும் போகாள் திரைவந்து
அழியாது சூழ்போக ஆங்குந்தி நின்ற
வரியார் அகலல்குல் மாதர் உரைசான்ற
மன்னன் கரிகால் வளவன்மகள் வஞ்சிக்கோன்
தன்னைப் புனல்கொள்ளத் தான்புனலின் பின்சென்று
கல்நவில் தோளாயோ என்னக் கடல்வந்து
முன்னிறுத்திக் காட்ட அவனைத் தழீஇக்கொண்டு
பொன்னங் கொடிபோலப் போதந்தாள் மன்னி
மணல்மலி பூங்கானல் வருகலன்கள் நோக்கிக்
கணவன்வரக் கல்லுருவம் நீத்தாள் இணையாய
மாற்றாள் குழவிவிழத் தன்குழவி யுங்கிணற்று
வீழ்த்தேற்றுக் கொண்டெடுத்த வேற்கண்ணாள்
வேற்றொருவன்
நீள்நோக்கம் கண்டு நிறைமதிவாள் முகத்தைத்

தானோர் குரங்குமுக மாகென்று போன
கொழுநன் வரவே குரக்குமுக நீத்த
பழுமணி அல்குல்பூம் பாவை விழுமிய
பெண்ணறி வென்பது பேதைமைத்தே என்றுரைத்த
நுண்ணறிவி னோர்நோக்கம் நோக்காதே எண்ணிலேன்
வண்டல் அயர்விடத் தியானோர் மகட்பெற்றால்
ஒண்டொடி நீயோர் மகன்பெறின் கொண்ட
கொழுநன் அவளுக்கென் றியானுரைத்த மாற்றம்
கெழுமி அவளுரைப்பக் கேட்ட விழுமத்தால்
சிந்தைநோய் கூரும் திருவிலேற் கென்றெடுத்துத்
தந்தைக்குத் தாயுரைப்பக் கேட்டாளாய் முந்தியோர்
கோடிக் கலிங்கம் உடுத்துக் குழல்கட்டி
நீடித் தலையை வணங்கித் தலைசுமந்த
ஆடகப்பூம் பாவையவள் போல்வார் நீடிய
மட்டார் குழலார் பிறந்த பதிப்பிறந்தேன்
பட்டாங் கியானுமோர் பத்தினியே யாமாகில்
ஒட்டேன் அரசோ டொழிப்பேன் மதுரையுமென்
பட்டிமையும் காண்குறுவாய் நீயென்னா விட்டகலா
நான்மாடக் கூடல் மகளிரும் மைந்தரும்
வானக் கடவுளரும் மாதவரும் கேட்டீமின்
யானமர் காதலன் தன்னைத் தவறிழைத்த
கோநகர் சீறினேன் குற்றமிலேன் யானென்று
இடமுலை கையால் திருகி மதுரை
வலமுறை மும்முறை வாரா அலமந்து
மட்டார் மறுகின் மணிமுலையை வட்டித்து
விட்டா ளெறிந்தாள் விளங்கிழையாள் மட்டித்த
நீல் நிறத்துத் திரிசெக்கர் வார்நடைப்
பால்புரை வெள்ளெயிற்றுப் பார்ப்பனக் கோலத்து

மாலை எரியங்கி வானவன் முன்தோன்றி
மாபத் தினிநின்னை மாணப் பிழைத்தநாள்
பாயெரி இந்தப் பதியூட்டப் பண்டேயோர்
ஏவல் உடையேனா லியார்பிழைப்பா ரீங்கென்னப்
பார்ப்பார் அறவோர் பசுப்பத் தினிப்பெண்டிர்
மூத்தோர் குழவி எனுமிவரைக் கைவிட்டுத்
தீத்திறத்தார் பக்கமே சேர்கென்று காய்த்திய
பொற்றொடி ஏவப் புகையழல் மண்டிற்றே
நற்றேரான் கூடல் நகர்.

## வெண்பா

பொற்பு வழுதியுந்தன் பூவையரும் மாளிகையும்
விற்பொலியும் சேனையுமா வேழமும் - கற்புண்ணத்
தீத்தரு வெங்கூடல் தெய்வக் கடவுளரும்
மாத்துவத் தான்மறைந்தார் மற்று.

– இளங்கோவடிகள்

# 2. பெரிய புராணம்

## அரிவாள் தாய நாயனார்

வரும்புனல் பொன்னி நாட்டொரு வாழ்பதி
சுரும்பு வண்டொடு சூழ்ந்து முரன்றிட
விரும்பு மென்கண் உடையவாய் விட்டுநீள்
கரும்பு தேன்சொரி யுங்கண மங்கலம் 1

செந்நெ லார்வயல் கட்டசெந் தாமரை
முன்னர் நந்துமிழ் முத்தம் சொரிந்திடத்
துன்னு மள்ளர்கைம் மேற்கொண்டு தோன்றுவார்
மன்னு பங்கய மாநிதி போன்றுளார் 2

வளத்தி னீடும் பதியதன் கண்வரி
உளர்த்தும் ஐம்பால் உடையோர் முகத்தினும்
களத்தின் மீதும் கயல்பாய் வயலகல்
குளத்து நீடும் குழையுடை நீலங்கள் 3

அக்கு லப்பதி தன்னில் அறநெறித்
தக்க மாமனை வாழ்க்கையில் தங்கினார்
தொக்க மாநிதித் தொன்மையி லோங்கிய
மிக்க செல்வத்து வேளாண் தலைமையார் 4

தாய னார்எனும் நாமம் தரித்துளார்
சேய காலந் தொடர்ந்தும் தெளிவிலா
மாய னார்மண் கிளைத்தறி யாதவத்
தூய நாள்மலர் பாதம் தொடர்ந்துளார் 5

மின்னு செஞ்சடை வேதியர்க் காமென்று
செந்நெ லின்னமு தோடுசெங் கீரையும்
மன்னு பைந்துணர் மாவடு வுங்கொணர்ந்
தன்ன வென்றும் அமுதுசெய் விப்பரால் 6

இந்த நன்னிலை இன்னல்வந் தெய்தினும்
சிந்தை நீங்காச் செயலின் உவந்திட
முந்தை வேத முதல்வர் அவர்வழி
வந்த செல்வம் அறியாமை மாற்றினார் 7

மேவு செல்வம் களிறுண் விளங்கனி
ஆவ தாகி அழியவும் அன்பினால்
பாவை பங்கர்க்கு முன்பு பயின்றவித்
தாவில் செய்கை தவிர்த்திலர் நாயனார் 8

அல்லல் நல்குர வாயிடக் கூலிக்கு
நெல்ல றுத்துமெய்ந் நீடிய அன்பினால்
நல்ல செந்நெலில் பெற்றன நாயனார்
கொல்லை இன்னமு தாக்கொண் டொழுகுவார் 9

சாலி தேடி அறுத்தவை தாம்பெறுங்
கூலி எல்லாம் திருவமு தாக்கொண்டு
நீல நெல்லரி கூலிகொண் டுண்ணுநாள்
மால யற்கரி யாரது மாற்றுவார் 10

நண்ணிய வயல்கள் எல்லாம் நாள்தொறும் முன்னங் காண
வண்ணவார் கதிர்ச்செஞ் சாலி ஆக்கிட மகிழ்ந்து சிந்தை
அண்ணலார் அறுத்த கூலி கொண்டிஃ தடியேன் செய்த
புண்ணிய மென்று போத அமுதுசெய் விப்பா ரானார் 11

வைகலும் உணவி லாமை மனைப்படப் பையினிற் புக்கு
நைகர மில்லா அன்பின் நங்கையார் அடகு கொய்து
பெய்கலந் தமைத்து வைத்துப் பெருந்தகை யருந்தித் தங்கள்
செய்கடன் முட்டா வண்ணம் திருப்பணி செய்யு நாளில் 12

மனைமருங் கடகு மான வடநெடு வான மீனே
அனையவர் தண்ணீர் வார்க்க அமுதுசெய் தன்ப னாரும்
வினைசெயல் முடித்துச் செல்ல மேவுநா ளொருநாள் மிக்க
முனைவனார் தொண்டர்க் கங்கு நிகழ்ந்தது மொழியப் பெற்றேன் 13

முன்புபோல் முதல்வ னாரை அமுதுசெய் விக்க மூளும்
அன்புபோல் தூய செந்நெல் அரிசிமா வடுமென் கீரை
துன்புபோம் மனத்துத் தொண்டர் கூடையிற் சுமந்து போகப்
பின்புபோம் மனைவி யாரான் பெற்றஅஞ் சேந்திச் சென்றார் 14

போதரா நின்ற போது புலர்ந்துகால் தளர்ந்து தப்பி
மாதரார் வருந்தி வீழ்வார் மட்கலம் மூடு கையால்
காதலால் அணைத்தும் எல்லாம் கமரிடைச் சிந்தக் கண்டு
பூதநா யகர்தம் தொண்டர் போவதற் கினியென் னென்று 15

நல்லசெங் கீரை தூய மாவடு அரிசி சிந்த
அல்லல்தீர்த் தாள வல்லார் அமுதுசெய் தருளும் அப்பே
றெல்லையில் தீமை யேனிங் கெய்திடப் பெற்றிலேனென்
றொல்லையில் அரிவாள் பூட்டி ஊட்டியை அரிய லுற்றார் 16

ஆட்கொள்ளு மையர் தாமிங் கமுதுசெய் திலர்கொல் என்னாப்
பூட்டிய அரிவள் பற்றிப் புரையற விரவு மன்பு
காட்டிய நெறியின் உள்ளம் தண்டறக் கழுத்தி னோடே
ஊட்டியும் அரியா நின்றார் உறுபிறப் பரிவார் ஒத்தார் 17

மாசறு சிந்தை யன்பர் கழுத்தரி அரிவாள் பற்றும்
ஆசில்வண் கையை மாற்ற அம்பலத் தாடும் ஐயர்
வீசிய செய்ய கையும் மாவடு விடேல்வி டேலென்
றோசையும் கமரி னின்றும் ஒக்கவே எழுந்த வன்றே. 18

திருக்கைசென் றரிவாள் பற்றுந் திண்கையைப் பிடித்தபோது
வெறுக்கொடங் கூறு நீங்க வெவ்வினை விட்டு நீங்கிப்
பெருக்கவே மகிழ்ச்சி நீடத் தம்பிரான் பேணித் தந்த
அருட்பெருங் கருணை நோக்கி அஞ்சலி கூப்பி நின்று 19

அடியனேன் அறிவி லாமை கண்டுமென் னடிமை வேண்டிப்
படிமிசைக் கமரில் வந்திங் கமுதுசெய் பரனே போற்றி
துடியிடை பாக மான தூயநற் சோதி போற்றி
பொடியணி பவள மேனிப் புரிசடைப் புராண போற்றி 20

என்றவர் போற்றி செய்ய இடபவா கனராய்த் தோன்றி
நன்றுநீ புரிந்த செய்கை நன்னுத லுடனே கூட
ஒன்றிநம் உலகம் வாழ்வாய் என்றவர் உடனே நண்ண
மன்றுளே ஆடு மையர் மழவிடை உகைத்துச் சென்றார் 21

பரிவுறு சிந்தை அன்பர் பரம்பொரு ளாகி உள்ள
பெரியவர் அமுது செய்யப் பெற்றிலேன் என்று மாவின்
வரிவடு விடேலெ னாமுன் வன்கழுத் தரிவாள் பூட்டி
அரிதலால் அரிவாள் தாய ராயினார் தூய நாமம் 22

முன்னிலை கமரே யாக முதல்வனார் அமுது செய்யச்
செந்நெலின் அரிசி சிந்தச் செவியுற வடுவின் ஓசை
அந்நிலை கேட்ட தொண்டர் அடியிணை தொழுது வாழ்த்தி
மன்னுமா னாயர் செய்கை அறிந்தவா வழுத்த லுற்றேன். **23**

**சேக்கிழார்.**

# 3. கம்ப ராமாயணம்

## வாலிவதைப்படலம்

### வாலி இராமனை இகழ்ந்து ஏசுதல்

வாய்மையும் மரபும் காத்து மன்னுயிர் துறந்த வள்ளல்
தூயவன் மைந்த னேநீ பரதன்முன் தோன்றி னாயே
தீமைதான் பிறரைக் காத்துத் தான்செய்தால் தீங்கன் றாமோ
தாய்மையு மன்றி நட்பும் தருமமும் தழுவி நின்றாய் 1

குலமிது கல்வி யீது கொற்றமீ துற்று நின்ற
நலமிது புவன மூன்று நாயகம் உன்ன தன்றோ
வலமிதில் உலகம் தாங்கும் வண்மையீ தென்றால் திண்மை
அலமரச் செய்ய லாமோ அறிந்திருந் தயர்ந்து ளார்போல் 2

கோவியல் தரும முங்கள் குலத்துதித் தோர்கட் கெல்லாம்
ஓவியத் தெழுத வொண்ணா உருவத்தாய் உடைமை யன்றோ
ஆவியைச் சனகன் பெற்ற அன்னத்தை அமிழ்தின் வந்த
தேவியைப் பிரிந்த பின்னைத் திகைத்தனை போலும் செய்கை 3

அரக்கரோர் அழிவு செய்து கழிவரேல் அதற்கு வேறோர்
குரக்கினத் தாரைக் கொல்ல மனுநெறி கூறிற் றுண்டோ?
இரக்கமெங் குகுத்தாய் என்பால் என்னபிழை கண்டாய் அப்பா
பரக்கழி இதுநீ பூண்டால் புகழையார் பரிக்கற் பாலார் 4

ஒலிகடல் உலகம் தன்னில் ஊர்தரு குரங்கின் மாடே
கலியது காலம் வந்து பரந்ததோ கருணை வள்ளால்
மெலியவர் பால தேயோ வொழுக்கமும் விழுப்பம் தானும்
வலியவர் மெலிவு செய்தால் புகழன்றி வசையு முண்டோ? 5

கூட்டொரு வரையும் வேண்டாக் கொற்றவ பெற்ற தாதை
பூட்டிய செல்வ மாங்கோர் தம்பிக்குக் கொடுத்துப் போந்து
நாட்டொரு கருமம் செய்தாய் எம்பிக்கிவ் வரசை நல்கிக்
காட்டொரு கருமம் செய்தாய் கருமம்தான் இதன்மே லுண்டோ 6

அறைகழல் அலங்கல் வீர ராயவர் புரிவ தாண்மைத்
துறையென ஆயிற் றன்றே தொன்மையின் நன்னூற் கெல்லாம்
இறைவனீ என்னைச் செய்த தீதெனில் இலங்கை வேந்தன்
முறையல செய்தா னென்று முனிதியோ முனிவி லாதாய் 7

இருவர்போர் எதிருங் காலை இருவரும் நல்லுற் றாரே
ஒருவர்மேல் கருணை தூண்டி ஒருவர்மேல் ஒளித்து நின்று
வரிசிலை குழைய வாங்கி வாயம்பு மருமத் தெய்தல்
தருமமோ பிறிதொன் றாமோ? தருகில தென்னும் பக்கம் 8

வீர மன்று விதியன்று மெய்ம்மையின்
வார மன்று நின்மண்ணினுக் கென்னுடல்
பார மன்று பகையன்று பண்பழிந்து
ஈர மன்றி யிதென் செய்த வாறரோ? 9

இருமை நோக்கிநின் றியாவர்க்கும் ஒக்கின்ற
அருமை ஆற்றலன் றோஅறங் காக்கின்ற
பெருமை என்ப திதென்பிழை பேணல்விட்டு
ஒருமை நோக்கி ஒருவற் குதவலோ 10

செயலைச் செற்ற பகைதெறு வான்தெரிந்து
அயலைப் பற்றித் துணையமைந் தாயெனில்
புயலைப் பற்றுமப் பொங்கரி போக்கியோர்
முயலைப் பற்றுவ தென்ன முயற்சியோ 11

காரி யன்ற நிறத்தகளங் கமொன்று
ஊரி யன்ற மதிக்குள தாமெனச்
சூரி யன்மர புக்குமொர் தொல்மறு
ஆரி யன்பிறந் தாக்கினை யாமரோ 12

மற்றொ ருத்தன் வலிந்தறை கூவவந்து
உற்ற என்னை ஒளித்துயி ருண்டநீ
இற்றை யிற்பிறர்க் கும்இக லேறென
நிற்றி போலும் கிடந்த நிலத்தரோ 13

நூலி யற்கையும் நுங்குலத் துந்தையர்
போலி யற்கையும் சீலமும் போற்றலை
வாலி யைப்படுத் தாயலை மன்அற
வேலி யைப்படுத் தாய்விறல் வீரனே 14

தார மற்றொரு வன்கொளத் தன்கையில்
பார வெஞ்சிலை வீரம் பழிப்பதே
நேரு மன்று மறைந்து நிராயுதன்
மார்பி னெய்யவோ வில்லிகல் வல்லதே ! 15

**வாலியின் வார்த்தைக்கு இராமன் விடை கூறுதல்**

என்று தானும் எயிறு பொடிபடத்
தின்று கான்று விழிவழித் தீயுக
அன்ற வாலி அனையன கூறினான்
நின்ற வீரன் இனைய நிகழ்த்தினான் 16

பிலம்புக் காய்நெடு நாள்பெய ராயெனாப்
புலம்புற் றுன்வழிப் போதலுற் றான்தனைக்
குலம்புக் கான்ற முதியர் குறிக்கொள்நீ
அலம்பொற் றாரவ னேயர சென்றலும் 17

வான மாளவென் தம்முனை வைத்தவன்
தானு மாளக் கிளையினி றத்தடிந்து
யானு மாள்வெ னிருந்தர சாள்கிலேன்
ஊன மான உரைபகர்ந் தீரென 18

பற்றி யான்ற படைத்தலை வீரமும்
முற்று ணர்ந்த முதியரும் முன்பரும்
எற்று நும்மர செய்துவை யாமெனக்
கொற்ற நன்முடி கொண்டதக் கோதிலான் 19

வந்த நின்னை வணங்கி மகிழ்ந்தனன்
எந்தை என்கண் இனத்தவர் ஆற்றலின்
தந்த உன்னர சென்று தருக்கிலான்
முந்தை யுற்றது சொற்ற முனிந்துநீ 20

கொல்ல லுற்றனை உம்பியைக் கோதவற்கு
இல்லை என்ப துணர்ந்தும் இரங்கலை
அல்லல் செய்யேல் உனக்கப யம்பிழை
புல்ல லென்னவும் புல்லலை பொங்கினாய் 21

ஊற்ற முற்றுடை யானுனக் காரமர்
தோற்று மென்று தொழுத கையானைநீ
கூற்ற முண்ணக் கொடுப்பனென் றெண்ணினாய்
நாற்றி சைக்கும் புறத்தையும் நண்ணினான் 22

அன்ன தன்மை அறிந்தும் அருளலை
பின்ன வனிவன் என்பதும் பேணலை
வன்னி தானிடு சாப வரம்புடைப்
பொன்ம லைக்கவன் நண்ணலிற் போகலை 23

ஈர மாவதும் இற்பிறப் பாவதும்
வீர மாவதும் கல்வியின் மெய்ந்நெறி
வார மாவது மற்றொரு வன்புணர்
தார மாவது தாங்கும் தருக்கரோ 24

மறம்தி றம்பல் வலியம் எனாமனம்
புறந்தி றம்பல் எளியவர்ப் பொங்குதல்
அறம்தி றம்பல் அருங்கடி மங்கையர்
திறம்தி றம்பல் தெளிவுடை யோர்க்கெலாம் 25

தருமம் இன்ன தெனுந்தகைத் தன்மையும்
இருமை யுந்தெரிந் தெண்ணலை எண்ணினால்
அருமை யும்பிதன் ஆருயிர்த் தேவியைப்
பெருமை நீங்கினை எய்தப் பெறுதியோ 26

ஆத லானும் அவனெனக் காருயிர்க்
காத லானென லானுநிற் கட்டனென்
ஏதி லாரும் எளியரென் றாரையும்
தீது தீர்ப்பதென் சிந்தைக் கருத்தரோ 27

**மீண்டும் வினாத் தொடுத்த வாலிக்கு இராமனும் இலக்குவனும் விடையளித்த பின் வாலி கூறல்**

கவிகுலத் தரசு மன்ன கட்டுரை கருத்திற் கொண்டான்
அவியுறு மனத்த னாகி அறத்திறன் அழியச் செய்யான்
புவியுடை அண்ண லென்ப தெண்ணினான் பொருந்த முன்னே
செவியுறு கேள்விச் செல்வன் சென்னியின் இறைஞ்சிச் சொன்னான் 28

தாயென உயிர்க்கு நல்கித் தருமமும் தகவும் சால்பும்
நீயென நின்ற நம்பி நெறியினி னோக்கு நேர்மை
நாயென நின்ற எம்மால் நவையற உணர லாமே
தீயன பொறுத்தி என்றான் சிறியன சிந்தி யாதான். 29

**– கம்பர்**

# 4. சீறாப்புராணம்

## ஹிஜுரத்துக் காண்டம் – விடமீட்ட படலம்

(முகம்மது நபி தம் தோழர்களில் ஒருவராகிய அபூபக்கருடன் மக்காவிலிருந்து மதீனாவிற்குச் செல்லும் வழியில் ஒரு குகையில் மறைந்திருத்தல்)

நகரைவிட் டகன்று கான்சூழ் நகத்திடத் துறைந்து தேடும்
இகலவர் கண்ணிற் காணா திருந்தவண் இருக்கும் காலைப்
புகலபூ பக்கர் செவ்வி மடிமிசைப் பொருந்த வாசந்
திகழ்சிரம் சேர்த்தி வள்ளல் செழுந்துயில் புரிவ தானார் 1

### பாம்பு தோன்றல்

மறைநபி துயிலா நின்ற மலைமுழை அதனின் கண்ணே
குறுவளை அனேக மாங்கோர் வளையினிற் கொடுங்கண் வெவ்வாய்த்
தெறுநுனைப் புரைப்பற் புண்ணாச் சிறுபொறிப் படத்த செஞ்சூட்
டெறுழ்வலிக் கரிய பாந்தள் இருந்தலை நீட்டிற் றன்றே.
2

### அபூபக்கர் வளையை அடைதல்

படியடி பரப்பச் செய்யா முகம்மதும் பரிவு கூர
மடிமிசை துயின்றா ரிந்த வளையிடத் தரவும் கண்டேம்
விடிவதெவ் வாறோ என்ன வெருவிநெஞ் சுளைந்து போர்த்த
பிடவையிற் கிழித்துச் சுற்றிப் பேதுறா தடைத்து நின்றார் 3

ஒருவளை யன்றி யாவும் அடைத்தன முரக மீங்கு
வருமெனின் மறைப்ப யாது மிலைத்திரு வள்ள லார்நித்
திரைமறுத் திடுதல் நன்றன் றெனவுடல் திடுக்கிட் டேங்கிப்
பருவரல் சுமந்து நின்றார் பணிவர வறிகி லாரே 4

### அபூபக்கரைப் பாம்பு கடித்தல்

புறப்படற் கரிதாய் வேகம் பொங்கிகண் செவந்து சீறி
மறைப்படும் வளைக்கு ளார்ந்த வல்லுடல் நெளிந்து நீட்டிக்
குறிப்பொடு கெந்த நான்கும் குழைவற நிமிர்ந்து வாய்விண்
டுறப்பட உள்ளந் தாளிற் கவ்விய துரக மன்றே 5

மிதிப்படும் வளையில் காலை விடுத்திலர் கடித்து மென்னக்
கொதிப்பொடு கெந்த நானகும் குறைபடச் சீறிச் சீறிப்
பதிப்பொடும் உடலை வீங்கிப் படுவிட மனைத்துஞ் சிந்தி
அதிர்ப்பொடும் வேக மீக்கொண் டடிக்கடி கடித்த தன்றே 6

மதியிடத் திரண்டு செவ்வி மனரமலர் பூத்த தென்ன
விதியவன் தூதர் கண்கள் விழித்தபூ பக்கர் தம்மை
எதிரினில் நோக்கச் சற்றே மயக்கமுற் றிருந்தார் கண்டு
புதியகா ரணங்கள் ஏதும் உளதெனிற் புகலு மென்றார் 7

அப்பெரும் பாந்தள் இங்ஙன் வருமுன மடைப்பான் வேண்டி
ஒப்பரும் மதியின் காந்தி உரித்தெனத் துகிலை என்றன்
கைப்படக் கீண்டுள் ளோடிக் கரந்திட அடைத்தே னப்பால்
துப்பொடும் வேறு வேறு புழைதொறும் தோன்றிற் றன்றே 8

முடங்கிநீண் டிருளுள் ளார்ந்த முழையொன்றில் தலையை நீட்டத்
தடங்கொள்கோ டிகமில் லாதாற் றாளினை நிமிர்த்துக் காலுந்
தொடங்கிலா வண்ணம் நீங்கா தடைத்தனன் துளைப்பற பாந்தள்
விடங்கள்கான் றரிதிற் சீறி வெகுளியிற் கடித்த தன்றே.
9

### நபி பாம்பிடம் வினவுதல்

ஏதொரு குறையும் செய்த தின்றிவை இகழ்ந்தெண் ணாமல்
நீதமில் லவரைப் போல நெடும்புடை யதனின் வந்து
தீதுறக் கொடிய வேகம் தலைக்கொளச் சினந்து சீறி
வேதனைப் படவாய் வைத்த தென்னென விரைவிற் கேட்டார்

### பாம்பு மறுமொழி கூறுதல் 10

ஆதி நாயகன் திருநபி யேஇவண் அடியேன்
நீதி யன்றியே தீண்டினன் அலனெடுங் காலம்
பூத ரத்தினெம் முன்னவர் சிலமொழி புகன்றார்
ஏதெ னச்செவி கொடுத்திட வேண்டுமெய் எழிலோய் 11

பொருவி லாக்கடல் புவிநடு மக்கமா புரத்தின்
அரிய நாயகன் திருமறை விளக்கியங் கிருந்திவ்
வரையி னுந்தனி வருகுவ ரென்னவும் மதீனாத்
திருந கர்க்கர சிருந்துதீன் திருத்துவ ரெனவும் 12

இனைய வாசகம் அனைத்தையும் உணர்ந்துளத் திருத்திக்
கனியும் சிந்தையும் கண்களும் களிப்புற நோக்கிப்
புனித மாகுவ தென்றெனத் தினந்தொறும் பொருவா
நினைவி னோர்வழித் தவத்தொடும் இருந்தனன் நெடுநாள் 13

தொல்லை வல்வினை தொடர்பவம் களைந்துநற் சுவனத்
தெல்லை யின்பதங் கிடைத்ததின் றெனத்தவழ்ந் தேகி
ஒல்லை யிற்குவ டடங்கலும் தேடினன் ஒளிருங்
கல்ல கத்துழை கண்டனன் இருவிழி களிப்ப 14

வரைமு ழைச்சிறு வாயிலில் சிலம்பிநூல் மறைப்ப
விரிசி றைப்புற விருப்பது நோக்கினன் விரைவில்
பெருகும் காப்பழித் திடுவதன் றெனப்பிரிந் தொதுங்கிப்
புரைய றத்தனி மற்றொரு வளையினிற் புகுந்தேன் 15

சிறுப்பு ழைக்குளென் னெட்டுடல் ஒடுங்கிடச் செருகிப்
புறப்ப டுந்திசை அனைத்தையும் அடைத்தனர் புழுங்கி
வெறுப்பொ டும்இருந் தொருவயின் மேவினன் விரைவின்
மறைப்ப டத்தடத் தாள்கொடவ் வளையையும் மறைத்தார் 16

போது தற்கிட மன்றியும் புதியனா யகன்றன்
தூத ரைத்தெரி சித்திட வரும்வழி தூர்த்த
பாத கத்தையு நினைத்துமைக் கொடுவிடம் பழுத்த
தீது றுங்கொடிற் றெயிற்றறக் கடித்தனன் சிறியேன் 17

### பாம்பை நபி பாராட்டுதல்

நெறியு ரைத்தனை கண்டனை நிலநெடுங் காலத்
துறவு கொண்டனை பவத்தொடர் துன்பமு மொழித்தாய்
குறைவ றப்பலன் படைத்தனை வாழ்ந்துநின் குலத்தோடு
உறைகெ னப்புக ழொடுமுரைத் தனர்மறை உரவோர் 18

### பாம்பு நபியைப் பணிதல்

வேத நாயகர் உரைத்தலும் விடத்தெயிற் றரவம்
பாத மென்மல ரிடத்தினில் சிரங்கொடு பணிந்து
கோத றக்கலி மாளடுத் தோதிமெய் குழைத்துப்
பூத ரத்துறு நெடுவளை இடைபுகுந் ததுவே 19

### நபி விடத்தை நீக்குதல்

அரவ கன்றபின் எழிலபூ பக்கர்செம் மலர்த்தாள்
விரித ருங்கடி வாயினில் கொடிவிட மகல
மரையி தழ்த்துளி நீரினை விரலினால் வாங்கிப்
புரைய றத்தட வினார்செழும் புகழ்முகம் மதுவே 20

பன்ன கக்கொடு விடப்பெரும் பருவரல் தீர்ந்து
மின்னு செங்கதிர் வேலபூ பக்கரும் விறலார்
மன்னர் மன்னவர் முகம்மது நபியுடன் வரையின்
இன்னி சைப்புக ழொடும்புதி யனைத்தொழு திருந்தார் 21

– **உமறுப் புலவர்.**

# 5. தேம்பாவணி

## நகரப்படலம்

### எருசலேம் பெருமை

மெய்வ்வழி மறைநூல் நீங்கி வியனுல கினிதென் றின்னா
வவ்வழி வுற்ற தென்ன வதிந்தெமை அளித்துக் காக்கச்
செவ்வழி யுளத்த தூயோன் தெரிந்தமா நகரி தென்றால்
இவ்வழி பின்ன ருண்டோ எருசலேம் நகரை வாழ்த்த 1

ஆளெனை உடைய நாதன் அவனியுள் மறுவாய்த் தூய்தன்
தாளிணை தாங்கிற் றென்னத் தாழவா னவரும் மக்கள்
கோளினை உடைவான் வீட்டைக் குறுகவும் வழியீ தென்றால்
மீளிணை வருந்தி நாடி வியனகர் புகழ்வ ராரோ 2

விட்புல னகன்று வாய்த்த வீட்டிடை வழங்கு மாட்சி
கட்புல னகன்ற தென்னக் கருதியோ ருவமை காட்ட
மட்புலன் இணங்கு மின்ன மாநகர் இணையென் றோதி
உட்புலன் கடந்த நாதன் உயர்நகர் புகழு மாறே 3

### நகர வளம்

மழைத்தலை விலகுப வளர்ந்த மாடங்கள்
இழைத்தலை அரிதினில் இழைத்த வெண்சுதை
பிழைத்தலை அறுத்தொளி பிளிர வெள்ளியந்
தழைத்தலை மலைக்குழாம் தயங்குந் தன்மைய 4

பயிற்றிய முகிலிடை பரந்த பான்மதி
வெயில்தியங் கியவென வெந்த கிற்புகை
அயிற்றிய வெயிலுமிழ் அரிய மாமணி
குயிற்றிய மாடங்கள் குளிர நாறுமே 5

தேனொடு ஞிமிறொடும் செறிந்த தும்பிகள்
வானொடு வழங்கிய மலர்செய் தோரணம்
கானொடு வழிந்ததேன் களித்து மேய்ந்தபின்
ஆனொடும் இசையொடும் ஊஞ்ச லாடுமால் 6

## பொழுதுபோக்கு

இன்னரு நகரமை எரிமணி இழையின்
உன்னரு மெழில்நலம் உடைவனக் கவினார்
பன்னரு மறநெறி பழுதற இனிதாய்த்
துன்னரு நயனொடு தொலைவன பொழுதே! 7

ஆடுவ ரமுதினோ டலர்மது விகலப்
பாடுவர் பொருள்நகு பயனமை கலைநூல்
நாடுவர் நளிருற நறவுறு மலரைச்
சூடுவர் நயனொடு தொலைவன பொழுதே. 8

மருக்கொடு மிளிரலர் மருவிய முடிசூழ்ந்
துருக்கொடு மிளிருவர் எரியொடு மணநீர்
திருக்கொடு மிளிரின தெருவிடை எறியப்
பெருக்கொடு மிளிர்நகர் பெயர்வன பொழுதே 9

## வாழ்க்கை வளம்

கோடாதன உயர்கோலொடு குளிர்மாறில குடையும்
வாடாதன தனிவாகையும் மதமாறில களிறும்
ஓடாதன அடல்தானையும் உளகோனொடு நகரம்
வீடாதன நெறிமாண்உறி மெலியாநலம் உளதாம் 10

சாலன்பொடு நிறைதாய்முலை தழுவும்சிறு குழவி
போலன்பொடு நகராள்பவன் அருளின்தயை புரிசெல்
கோலன்பொடு தழுவுங்குடி குறையொன்றில நகரின்
பாலன்பொடு நனிவாழ்வொடு படுநன்றிய தளவோ 11

மின்னாரினி திசைபாடலில் விளையின்பது பெரிதோ
பொன்னார்குழல் புகரின்பது பெரிதோகலை புரிநூல்
சொன்னாரவ ருரையின்பது பெரிதோபொழி துளிகள்
அன்னார் நிறை கொடையாற்பொரு ளருளின்பது பெரிதோ 12

**– வீரமாமுனிவர்**

# நான்காம் பருவம்

## சங்க இலக்கியம்

# பொருளடக்கம்

1. புறப்பொருள்

புறநானூறு

2. அகப்பொருள்

நற்றிணை

குறுந்தொகை

கலித்தொகை

அகநானூறு

3. திருக்குறள்

அறத்துப்பால் - இன்னா செய்யாமை

பொருட்பால் - பெருமை

காமத்துப்பால் - புணர்ச்சி விதும்பல்

4. பதினெண்கீழ்க்கணக்கு

நான்மணிக்கடிகை - விளம்பிநாகனார்

# பண்டை இலக்கியம்

## அ. புறப்பொருள்

### 1. புறநானூறு

1. ஒருநாள் செல்லலம் இருநாள் செல்லலம்
பலநாள் பயின்று பலரொடு செல்லினும்
தலைநாள் போன்ற விருப்பினன் மாதோ
அணிபூ ணணிந்த யானை இயல்தேர்
அதியமான் பரிசில் பெறூஉங் காலம்
நீட்டினும் நீட்டா தாயினும் யானைதன்
கோட்டிடை வைத்த கவளம் போலக்
கையகத் ததுவே பொய்யா காதே
அருந்தே மாந்த நெஞ்சம்
வருந்த வேண்டா வாழ்கவன் தாளே

திணை : பாடாண் துறை : பரிசில் கடாநிலை

*அதியமானை ஔவையார் பாடியது.*

2. வழிபடு வோரை வல்லறி தீயே
பிறர்பழி கூறுவோர் மொழிதே றலையே
நீமெய் கண்ட தீமை காணின்
ஒப்ப நாடி அத்தக ஒறுத்தி
வந்தடி பொருந்தி முந்தை நிற்பின்
தண்டமும் தணிதிநீ பண்டயிற் பெரிதே
அமிழ்தட் டானாக் கமழ்குய் யடிசில்
வருநர்க்கு வரையா வசையில் வாழ்க்கை
மகளிர் மலைத்த லல்லது மள்ளர்
மலைத்தல் போகிய சிலைத்தார் மார்ப
செய்திரங் காவினைச் சேண்விளங் கும்புகழ்
நெய்தலங் கானல் நெடியோய்
எய்தவந் தனம்யாம் ஏத்துகம் பலவே

திணை : பாடாண் துறை : இயன்மொழி

சோழன் நெய்தலங்கானல் இளஞ் சேட் சென்னியை
ஊன்பொதி பசுங்குடையார் பாடியது.

3. தொடியுடைய தோள்மணந்தனன்
கடிகாவிற் பூச்சூடினன்
தண்கமழும் சாந்துநீவினன்
செற்றோரை வழிதபுத்தனன்
நட்டோரை உயர்புகூறினன்
வலியரென வழிமொழியலன்
மெலியரென மீக்கூறலன்
பிறரைத்தான் இரப்பறியலன்
இரந்தோர்க்கு மறுப்பறியலன்
வேந்துடை அவையத்து ஓங்குபுகழ் தோற்றினன்
வருபடை எதிர்தாங்கினன்
பெயர்படை புறங்கண்டனன்
கடும்பரிய மாக்கடவினன்
நெடுந்தெருவில் தேர்வழங்கினன்
ஓங்கியல களிறூர்ந்தனன்
தீஞ்செறி தசும்புதொலைச்சினன்
பாணுவப்பப் பசிதீர்த்தனன்
மயக்குடைய மொழிவிடுத்தனன், ஆங்குச்
செய்ப வெல்லாம் செய்தன னாகலின்
இடுக வொன்றோ சுடுக வொன்றோ
படுவழிப் படுகஇப் புகழ்வெய்யோன் தலையே!

**திணை : பொதுவியல்** **துறை : கையறுநிலை**

**நம்பி நெடுஞ்செழியனைப் பேரெயின் முறுவலார் பாடியது**

4. தூர்ந்த கிடங்கின் சோர்ந்த ஞாயில்
சிதைந்த இஞ்சிக் கதுவாய் மூதூர்
யாங்கா வதுகொல் தானே தாங்காது
படுமழை உருமின் இறங்கு முரசின்
கடுமான் வேந்தர் காலை வந்தெம்
நெடுநிலை வாயில் கொட்குவர் மாதோ
பொருதா தமருவ ரல்லர் போருழந்து
அடுமுரண் முன்பின் தன்னையர் ஏந்திய
வடிவேல் எஃகின் சிவந்த உண்கண்
தொடியுறழ் முன்கை இளையோள்
அணிநல் லாகத்து அரும்பிய சுணங்கே.

**திணை : காஞ்சி துறை : மகட்பாற் காஞ்சி**

*மதுரை ஓலைக்கடைக் கண்ணம்*
*புகுந்தாராயத்தனார் பாடியது.*

5. சிறாஅஅர் துடியர் பாடுவல் மகாஅஅர்
தூவெள் ளறுவை மாயோற் குறுகி
இரும்புட் பூசல் ஓம்புமின் யானும்
விளரிக் கொட்பின் வெண்ணரி கடிகுவென்
என்போல் பெருவிதுப் புறுக வேந்தே
கொன்னும் சாதல் வெய்யோற்குத் தன்தலை
மணிமருள் மாலை சூட்டி அவன்தலை
ஒருகாழ் மாலை தான்மலைந் தனனே.

**திணை : கரந்தை துறை : வேத்தியல்**

**நெடுங்கழுத்துப் பரணர் பாடியது**

# ஆ. அகப் பொருள்

**1. நற்றிணை**

சிலரும் பலரும் கடைக்கண் நோக்கி
மூக்கின் உச்சிச் சுட்டுவிரல் சேர்த்தி
மறுகின் பெண்டிர் அம்பல் தூற்றச்
சிறுகோல் வலந்தனள் அன்னை அலைப்ப
அலந்தனென் வாழி தோழி கானல்
புதுமலர் தீண்டிய பூநாறு குரூஉச்சுவல்
கடுமா பூண்ட நெடுந்தேர் கடைஇ
ஒருநாள் வரூஉம் இயல்தேர்க் கொண்கனொடு
செலவயர்ந் திசினால் யானே
அலர்சுமந் தொழிகஇவ் வழுங்கல் ஊரே.

**திணை:** நெய்தல் **துறை :** தோழி தலைவியை
உடன்போக்கு வலித்தது

**உலோச்சனார்**

**2. குறுந்தொகை**

அணிற்பல் லன்ன கொங்குமுதிர் முண்டகத்து
மணிக்கே ழன்ன மாநீர்ச் சேர்ப்ப
இம்மை மாறி மறுமை யாயினும்
நீயா கியரென் கணவனை
யானா கியர்நின் நெஞ்சுநேர் பவளே

**துறை : ஆற்றாமை நீங்கியவழிப் பள்ளியிடத்தானாகிய தலைமகனுக்குத் தலைவி சொல்லியது.**

**அம்மூவனார்**

### 3. கலித்தொகை

மாமலர் முண்டகத் தில்லையொ டொருங்குடன்
கானல் அணிந்த உயர்மணல் எக்கர்மேல்
சீர்மிகு சிறப்பினோன் மரமுதல் கைசேர்த்த
நீர்மலி கரகம்போல் பழந்தூங்கு முடத்தாழைப்
பூமலர்ந் தவைபோல புள்ளல் கும் துறைவ கேள்
ஆற்றுத லென்பதொன் றலந்தவர்க் குதவுதல்
போற்றுத லென்பது புணர்ந்தாரைப் பிரியாமை
பண்பெனப் படுவது பாடறிந் தொழுகுதல்
அன்பெனப் படுவது தன்கிளை செறாஅமை
அறிவெனப் படுவது பேதையார் சொல்நோன்றல்
செறிவெனப் படுவது கூறியது மறாஅமை
நிறையனப் படுவது மறைபிற ரறியாமை
முறையெனப் படுவது கண்ணோடா துயிர்வெளவல்
பொறையெனப் படுவது போற்றாரைப் பொறுத்தல்
ஆங்கிவை அறிந்தனி ராயினென் தோழி
நன்னுதல் நலனுண்டு துறத்தல் கொண்க
தீம்பால் கொள்பவர் கொள்கலம் வரைதல்
நின்தலை வருந்தியாள் துயரம்
சென்றனை களைமோ பூண்கநின் தேரே..

**திணை :** நெய்தல்

**துறை:** வரைவுஉடன்பட்டோர்க்
கடாவல் வேண்டினும் என்பதனால்
தலைவன் தெருளாதவனைத்
தெருட்டி வரைவு கடாயது

**நல்லந்துவனார்**

## 4. அகநானூறு

வீங்குவிசைப் பிணித்த விரைபரி நெடுந்தேர்
நோன்கதிர் சுமந்த ஆழியாழ் மருங்கில்
பாம்பென முடுகுநீர் ஓடக் கூம்பிப்
பற்றுவிடு விரலிற் பயறுகாய் ஊழ்ப்ப
அற்சிரம் நின்றன்றால் பொழுதே முற்பட
ஆள்வினைக் கெழுந்த அசைவில் உள்ளத்து
ஆண்மை வாங்கக் காமம் தட்ப
கவைபடு நெஞ்சம் கண்கண் அகைய
இருதலைக் கொள்ளி இடைநின்று வருந்தி
ஒருதலைப் படாஅ உறவி போன்றனம்
நோம்கொல் அளியள் தானே யாக்கைக்கு
உயிரியைந் தன்ன நட்பின் அவ்வுயிர்
வாழ்த லன்ன காதல்
சாத லன்ன பிரிவரி யோளே.

**திணை : பாலை** **துறை : போகாநின்ற தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது**

**நரைமுடிநெட்டையர்.**

# 3. திருக்குறள்

## அறத்துப்பால் – இன்னா செய்யாமை

சிறப்பீனும் செல்வம் பெறினும் பிறர்க்கின்னா
செய்யாமை மாசற்றார் கோள். 1

கறுத்தின்னா செய்தஅக் கண்ணும் மறுத்தின்னா
செய்யாமை மாசற்றார் கோள். 2

செய்யாமல் செற்றார்க்கும் இன்னாத செய்தபின்
உய்யா விழுமம் தரும். 3

இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல். 4

அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்
தன்நோய்போல் போற்றாக் கடை. 5

இன்னா எனத்தான் உணர்ந்தவை துன்னாமை
வேண்டும் பிறன்கண் செயல். 6

எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானாம்
மாணாசெய் யாமை தலை. 7

தன்னுயிர்க்கு இன்னாமை தானறிவான் என்கொலோ
மன்னுயிர்க்கு இன்னா செயல். 8

பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும். 9

நோயெல்லாம் நோய்செய்தார் மேலவாம் நோய்செய்யார்
நோயின்மை வேண்டு பவர். 10

## பொருட்பால் – பெருமை

ஒளிஒருவற் குள்ள வெறுக்கை இளிஒருவற்கு
அஃதிறந்து வாழ்தும் எனல். 1

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான். 2

மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர் கீழிருந்தும்
கீழல்லார் கீழ்அல் லவர். 3

ஒருமை மகளிரே போலப் பெருமையும்
தன்னைத்தான் கொண்டொழுகின் உண்டு. 4

பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை உடைய செயல். 5

சிறியார் உணர்ச்சியுள் இல்லைப் பெரியாரைப்
பேணிக்கொள் வேம்என்னும் நோக்கு. 6

இறப்பே புரிந்த தொழிற்றாம் சிறப்புந்தான்
சீரல் லவர்கண் படின். 7

பணியுமாம் என்றும் பெருமை சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து. 8

பெருமை பெருமிதம் இன்மை சிறுமை
பெருமிதம் ஊர்ந்து விடல். 9

அற்றம் மறைக்கும் பெருமை சிறுமைதான்
குற்றமே கூறி விடும். 10

## காமத்துப் பால் – புணர்ச்சி விதும்பல்

உள்ளக் களித்தலும் காண மகிழ்தலும்
கள்ளுக்கில் காமத்திற் குண்டு. 1

தினைத்துணையும் ஊடாமை வேண்டும் பனைத்துணையும்
காமம் நிறைய வரின். 2

பேணாது பெட்பவே செய்யினும் கொண்கனைக்
காணா தமையல கண். 3

ஊடற்கண் சென்றேன்மன் தோழி அதுமறந்து
கூடற்கண் சென்றதென் னெஞ்சு. 4

எழுதுங்கால் கோல்காணாக் கண்ணேபோல் கொண்கன்
பழிகாணேன் கண்ட விடத்து.

காணுங்கால் காணேன் தவறாய காணாக்கால்
காணேன் தவறல் லவை. 6

உய்த்தல் அறிந்து புனல்பாய் பவரேபோல்
பொய்த்தல் அறிந்தென் புலந்து. 7

இளித்தக்க இன்னா செயினும் களித்தார்க்குக்
கள்ளற்றே கள்வநின் மார்பு. 8

மலரினும் மெல்லிது காமம் சிலரதன்
செவ்வி தலைப்படு வார். 9

கண்ணின் துனித்தே கலங்கினாள் புல்லுதல்
என்னினும் தான்விதுப் புற்று. 10

– திருவள்ளுவர்

# 4. நான்மணிக் கடிகை

கள்வம்என் பார்க்கும் துயிலில்லை காதலிமாட
டுள்ளம்வைப் பார்க்கும் துயிலில்லை ஒண்பொருள்
செய்வமென் பார்க்கும் துயிலில்லை அப்பொருள்
காப்பார்க்கும் இல்லை துயில். 1

மனைக்குப்பாழ் வாள்நுத லின்மைதான் செல்லும்
திசைக்குப்பாழ் நட்டோரை இன்மை -இருந்த
அவைக்குப்பாழ் மூத்தோரை இன்மை தனக்குப்பாழ்
கற்றறி வில்லா வுடம்பு. 2

திருவின் திறனுடைய தில்லை ஒருவற்குக்
கற்றலின் வாய்த்த பிறவில்லை - எற்றுள்ளும்
இன்மையின் இன்னாத தில்லைஇல் லென்னாத
வன்மையின் வன்பாட்ட தில். 3

சிறந்தார்க் கரிய செறுதல்எஞ் ஞான்றும்
பிறந்தார்க் கரிய துணைதுறந்து வாழ்தல்
வரைந்தார்க் கரிய வகுத்தூண் இரந்தார்க்கொன்
றில்லென்றல் யார்க்கும் அரிது. 4

மனைக்கு விளக்கம் மடவார் மடவார்
தமக்குத் தகைசால் புதல்வர் மனக்கினிய
காதல் புதல்வர்க்குக் கல்வியே கல்விககு
ஓதின் புகழ்சால் உணர்வு. 5

**– விளம்பி நாகனார்**

அச்சாக்கம் :

M.M.3114, மதுரை காமராசர் பல்கலைக்கழக கூட்டுறவு அச்சகம் லிட்., மதுரை-21.